ஸ்தோத்ரமாலா —ஸீரீஸ் நெ. க.

ஸ்ரீரஸ்து.

ஸ்ரீமத்பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யரான

ஸ்ரீகூர நாராயண ஜீயர் ஸ்வாமி

திருவாய் மலர்ந்தருளிய

ஸுதர்சநசதகம்.

பெருமாள்கோயில் பிரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசாரியர் இயற்றிய

பதவுரை விசேஷவுரையுடன்,

மதுரை:

ஹரிஸமயதிவாகர அச்சுக்கூடத்தில்

அச்சிடுவிக்கப்பட்டது.

1926,

இதன் விலை 0—1௨—0] [போஸ்டேஜ் தனி.




பெருமாள் கோயில், பிரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசாரியர்.

(ஸ்தோத்ர, திவ்யப்ரபந்த-வ்யாக்யாதா.)

Kumaran Press, Conjeeveram.

ஸ்ரீரஸ்து.



“ஜ்யோதி[illegible] ஜயதி”

முன்னுரை.

திருவரங்கம் பெரிய கோயிலில் ஸ்ரீரங்க நாராயணஜீயர்ஸ்வாமி மடத்தில் அபிஷிக்தராக எழுந்தருளியிருந்த ஸ்வாமிகளுள் ஒருவரான ஸ்ரீகூரநாராயணஜீயர்ஸ்வாமி திருவாய் மலர்ந்தருளிய ஸுதர்ஸந ஸதகமென்னும் இந்த ஸ்தோத்ரம் ஶப்தஸௌந்தர்ய மாதுர்யத்தாலும் அர்த்தவைலக்ஷண்யத்தாலும் ஒப்புயர்வற்றதென்னுமிடம் ப்ரஸித்தமேயாம். ஆரோக்யம், ஐஶ்வர்யம், ஆயுஸ்ஸு முதலிய பலன்களை விரும்புமவர்கள் ஸங்கல்ப நியமபூர்வகமாக இந்த ஸ்தோத்ர பாராயணம் செய்து இஷ்டப்ராப்திகளையும் அநிஷ்டநிவ்ருத்திகளையும் எளிதில் பெறுகிறார்களென்பதும் ஸர்வப்ரஸித்தம். அநந்யப்ரயோஜநர்களான முமுக்ஷுக்களுக்கும் இந்த ஸ்தோத்ரம் நித்யாநுஸந்தேயமென்பதில் விப்ரதிபத்தி இல்லை.

ஆகவே, ஸர்வஜீவநமும் ஸர்வோபஜீவநமுமான இந்த ஸ்தோத்ரத்திற்குப் பொருள் தெரிந்துகொள்ளவேண்டியது அனைவர்க்கும் ஆவஶ்யகம். இதற்கு அதிஸங்க்ஷிப்தமான ஸம்ஸ்க்ருத வ்யாக்யானமொன்றிருந்தாலும் ஸர்வஸாதாரணமான நடையில் தமிழுரையொன்று இருக்கவேண்டியது ஆவஶ்யகமேயாம். இங்ஙனே ஓருரை எழுதும்படியாகப் பலபெரியோர்கள் * பொருளல்லாதவென்னைப்பொருளாக்கி நியமித்தருளினமையால் அந்த நியமனத்தைச் சிரமேற்கொண்ட அடியேன் அஜ்ஞர்க்கும் ப்ராஜ்ஞர்க்கும் வாசியற உபகாரகமாம்படி உரையெழுதத் தொடங்குகின்றேன். நியமேந ப்ரதிபதார்த்தமும், ப்ராயேண தாத்பர்யமும், க்வசித் விஶேஷார்த்தமும், இன்

றியமையாத இடங்களில் பதங்களின் வ்யுத்பத்திவிவரணமும், தேவையான புராண வரலாறுகளும் இதில் வரையப்படும்.

இரவிலும் விரைவிலும் எழுதுவதனால் நேரும் பிழைகளையும், மானிடரியற்கைக்குரிய ப்ரமப்ரமாதாதிகளால் நேரும் பிழைகளையும் மற்றும் அச்சுப் பிழைகளையும் பெரியோர் பொறுத்தருளி, க்ஷமாகுணபூர்த்திகளாக விளங்குவார்களென்று விஶ்வஸிக்கிறேன். அன்றி, குற்றங்குறைகளை எடுத்துக் கூறுவார் பக்கல் க்ருதஜ்ஞனாகவுமிருப்பேன்; அவை திருத்தவும்படும். நிற்க,

இந்த ஸுதர்ஶனஶதக ஸ்தோத்ரத்திற்கு கர்த்தாவான ஸ்ரீ கூரநாராயண ஜீயர் ஸ்வாமி எக்காலத்தவர்? எவ்வாசிரியருடைய திருவடிஸம்பந்தி? இன்னும் என்னென்ன க்ரந்தங்கருளிச் செய்துள்ளார்? இத்யாதி விஷயங்களைப் பலர் விமர்ஶிக்கப் புகுந்து அவரவர் மனம்போனபடி பேசிப்போருவர். ப்ராமாணிகர்களான பெரியோர்பக்கல் கேட்டுணர்ந்ததை அடியேன் இங்கு ஸங்க்ரஹித்தெழுதுகின்றேன்;—இவர் கூரத்தாழ்வானுடைய காலத்திலே எழுந்தருளியிருந்தவரும், ஸாக்ஷாத் அவருடைய திருவடிகளிலே ஆஶ்ரயித்து ஸகலஶாஸ்த்ரங்களையும் கற்றுணர்ந்தவருமாவர்.

“கோயிலொழுகு” என்னும் க்ரந்தத்தில் “கூரநாராயணஜீயர் வைபவம்” என்ற தலைப்பின்கீழ் எழுதப்பட்டுள்ள சில பங்க்திகளை இங்கே உதாஹரிப்போம்:—“நஞ்சீயர் தர்ஶநம் நிர்வஹித்துக் கொண்டிருக்கிற காலத்திலே, விண்ணப்பஞ் செய்வாரிலே ஒருத்தர் பெருமாள் ஸந்நிதிக்கு யோக்யமாகாமலிருக்க, ஆழ்வானுடைய தேவிகள் ஆண்டாள் அவரிடத்தில் க்ருபையாலே ஆழ்வான் திருமாலிருஞ்சோலையிலே எழுந்தருளியிருக்கச் செய்தே ஆழ்வான் திருவடிகளிலே ஆஶ்ரயித்து ஸந்ந்யஸித்து ஸர்வஜ்ஞராய் ஆசார்யன் குடியே நிரூபகமாகக் ‘கூரநாராயணஜீயர்’ என்று திருநாமத்தையுடையவராய் மஹாஸாத்விகராய்க்கோயில்வாஸம் பண்ணிக்கொண்டிருக்கிறவரை அழைத்து, ‘உம்முடைய ஶாஸ்த்ரங்களும்ஒரு கைங்கர்யத்திலே உபயோகிக்கும்’ என்று சொல்லியிருந்தீரே, நீர் இப்போது இந்த விண்ணப்பஞ் செய்வாரைப் பெருமாள் கைங்கர்யத்துக்கு யோக்ய

ராகும்படி பண்ணும்' என்று நியமிக்க, அந்த கூரநாராயணஜீயரும் ஸுதர்ஶநஶதகத்தைப் பண்ணி, விண்ணப்பஞ்செய்வார் நோயற்றுப் பெருமாள் ஸேவாகாலத்துக்கு யோக்யராகும்படி பண்ணினார்"—என்று கோயிலொழுகில் எழுதப்பட்டுள்ளது.

ஸாரஸாரவைராக்யோபநிஷத்பாஷ்யமியற்றினவரும் இந்த கூரநாராயணஜீயரேயென்றும். தைத்திரீயோபநிஷத்பாஷ்யமியற்றினவரும் இவரேயென்றும் சிலர் கூறுவதெல்லாம் ஐதிஹ்யவிருத்தமேயாம். ஸ்ரீவேதாந்ததேஶிகனுடைய காலத்துக்குப் பிற்பட்டவராயும் ஸந்யாஸாஶ்ரமியாயுமிருந்த ஸ்ரீவத்ஸாங்க ஸ்ரீநாராயணமுநியென்பவரால் செய்தருளப்பட்டது ஸாரஸாரவைராக்யபாஷ்யம். அந்த பாஷ்யத்தின் அவஸாநத்திலே "வேதாந்தாசார்யபாதாப்ஜஸ்ப்ருஷ்டநிஷ்டமவேதஸா । வாஜிவேதாந்தஸாராயம் ஸ்ரீவத்ஸாங்கேந தர்ஶித:" என்று அவர் தம்மாலே எழுதப்பட்டுள்ள ஶ்லோகமும் நோக்கத்தக்கது.

இனி தைத்திரீயோபநிஷத்பாஷ்யம் அருளிச்செய்தவரும் ஸுதர்ஶநஶதககர்த்தாவும் அபிந்நர்களேயோவென்னில்; அன்று. ஸுதர்ஶநஶதககர்த்தா கூரநாராயணஜீயர்க்குப்பின் த்ருதீய பட்டஸ்தராக ஸ்ரீரங்கநாராயணஜீயர் மடத்தில் எழுந்தருளியிருந்தவரும், நலந்திகழ் நாராயணஜீயர் என்றும் ஸ்ரீரங்கராஜஜீயர் என்றும் மறுதிருநாமங்களையுடையவருமான ஸ்வாமியே தைத்திரீயோபநிஷத்பாஷ்யகர்த்தாவாவர். ஆகையாலே, ஸுதர்ஶநஶதககாரரும் ஸாரஸாரவைராக்யோபநிஷத்பாஷ்யகாரரும் தைத்திரீயோபநிஷத்பாஷ்யகாரரும் பரஸ்பரம் பிந்நபிந்நர்களென்று தெளியக்கடவது.

ஸுதர்ஶநஶதககூரநாராயணஜீயர் ஸ்வாமியின் வைபவம் கோயிலொழுகில் சுருக்கமாகவும், ஸ்ரீரங்கநாராயணஸ்வாமி மடப்ரகாஶிகையில் சிறிது விரிவாகவும் காணத்தகும். இவர் அறுபது திருநக்ஷத்ரம் எழுந்தருளியிருந்தார்.

இவர் மந்த்ரஶக்திப்ரபாவத்தாலே அழகிய மணவாளனுக்குப்பல கைங்கர்யங்கள் நிர்வஹித்துப் போந்தாரென்றும், இவருடைய காலத்தில் 'யத்ராஷ்டாக்ஷரஸம்ஸித்தோ மஹாபாகோ மஹீயதே ।

நதத்வஶ்ரீஶிஷ்டாநி வ்யாயிநோ ஹ்யக்ஷதஸ்யா:" என்ற ப்ரமாணம் ஸ்வப்ரத்யக்ஷமாகவேயிருந்ததென்றும் பூர்வாசார்யர் அருளிச்செய்யக் கேட்டிருக்கை.

இவர் அருளிச்செய்த க்ரந்தங்களில் ஸாதுபாந்தஶதகமொன்றே ப்ரஸித்தமாயிராநின்றது. கோயிலில் ஸ்ரீரங்கநாராயணஜீயர் மடத்தில் ஆசார்யவிக்ரஹங்களாக எழுந்தருளியிருக்கிற இவருடைய திவ்யமங்கள விக்ரஹத்தின் ஸிம்ஹாஸநத்தில் நான்கு ஜீயர்களை எழுந்தருளப் பண்ணியிருக்கக் காண்கையாலே இவர்க்கு நான்கு ஜீயர்கள் ப்ரதாந ஶிஷ்யர்களாக இருந்தனரென்று தெரிகிறது. மற்றும் இவரது விசேஷங்களை வல்லார்வாய்க் கேட்டுணர்க.

இந்த ஸாதுபாந்தஶதகம் நிகமநஶ்லோகமுட்பட நூற்றொரு ஶ்லோகங்கள் கொண்டது. இதில், இருபத்திநான்காவது ஶ்லோகமளவும் ஜ்ஞாநவர்ணநமும், அதற்குமேல் முப்பத்தெட்டாம்ஶ்லோகமளவும் தேஜோவர்ணநமும், அதற்குமேல் ஐம்பதாம் ஶ்லோகமளவும் சாபவர்ணநமும், அதற்குமேல் அறுபத்தோராம் ஶ்லோகமளவும் நாஸிகாவர்ணநமும், அதற்குமேல் எழுபத்தினான்காம் ஶ்லோகமளவும் அக்ஷிவர்ணநமும், அதற்குமேல் நூறாம்ஶ்லோகமளவும் ஸாமாந்ய வர்ணநமுமாய்ச் செல்லுகிறது.

"துஞ்சும்போதழைமின் துயர்வரில் நினைமின் துயரிலீர் சொல்லிலும் நன்றாம், நஞ்சுதான் கண்டீர் நம்முடை வினைக்கு நாராயணாவென்னும் நாமம்" என்றாற்போலே ஸர்வதோபந்நிவர்த்தகமான இந்த ஸ்தோத்ரம் ஸர்வர்க்கும் ஸதாநுஸந்தேயமாகக் கடவது.

இங்ஙனம்:—

பெருமாள்கோயில், ப்ரதிவாதிபயங்கரம்,

அண்ணங்கராசார்ய தாஸன்.

॥ ஸ்ரீ: ॥

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:॥

ஸ்ரீகூரநாராயணமஹாமுநீந்த்ரநாதஸூக்தி

ஸ்ரீஸுதர்சநசதகஸ்ய வ்யாக்யா ।

ஸ்ரீகாஞ்சீ ப்ரதிவாதிபயங்கர அண்ணங்கராசார்ய விரசிதா॥

தனியன்.

ரங்கேச விஜ்வரீகாரகாரணஸ்ய
வ்யதாத் ஸௌதர்சநம் சதம் நிவ்ருத்தயே ।
ஸமாச்ரயேஹம் ஸர்வாபீஷ்டப்ரதம் ய:
தம் கூரநாராயண நாமகம் முநிம் ॥

பதவுரை.

ய:—	யாவனொரு கூரநாராயண ஜீயர்
ரங்கேச விஜ்வரீகார காரணஸ்ய நிவ்ருத்தயே	திருவரங்கப்பெருமாளரையருடைய நோய் தீர்வதன்பொருட்டு
ஸர்வாபீஷ்டப்ரதம்	அபேக்ஷிதங்களை நிறைவேற்றவல்ல
ஸௌதர்சநம் சதம்	திருவாழியாழ்வான்விஷயமான ஸ்தோத்திரமாகிய ஸ்ரீஸுதர்சந சதகத்தை
வ்யதாத்	அருளிச் செய்தாரோ
தம் கூரநாராயண நாமகம் முநிம்	அந்த ஸ்ரீகூரநாராயணஜீயர் ஸ்வாமியை
அஹம் ஸமாச்ரயே	அடியேன் பணிகின்றேன்.

கருத்து:—திருவரங்கப் பெருமாளரையர் திருமேனியில் நோவு சாத்திக் கொண்டிருக்கையில் அதுகண்டு ஸஹித்திருக்கமாட்டாது ஸ்ரீகூரநாராயண ஜீயர்ஸ்வாமி அந்த நோய்தீருவதற்காக ஸ்ரீஸுதர்சநாழ்வான் விஷயமாக நூறு ஶ்லோகங்கள் கொண்ட ஸ்தோத்ரத்தை யருளிச் செய்தார். இந்த ஸ்தோத்திரமானது ஸகலாபேக்ஷிதங்களையும் தலைக்கட்டித் தரவல்லது. இப்படிப்பட்ட ஸ்தோத்ரத்தை யருளிச் செய்த அந்த ஜீயர் ஸ்வாமியை அடியேன் தொழுகின்றேனென்கை............

ஸ்ரீ:

ஸுதர்சநசதகத்தின் அடிவரவு.

---

1. [illegible]

2. [illegible]

3. [illegible]

4. [illegible]

5. [illegible]

6. [illegible]

7. [illegible]

8. [illegible]

9. [illegible]

10. [illegible]

அடிவரவு முற்றிற்று.

ஸ்ரீரஸ்து.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீகூரநாராயண ஜீயர்ஸ்வாமி அருளிச்செய்த

ஸுதர்சநசதகம்.

ஸௌதர்ஸந்யுஜ்ஜிஹாநா
திஸி விதிஸி திரஸ்க்ருத்ய ஸாவித்ரமர்சி:
பாஹ்யாபாஹ்யாந்தகார
க்ஷதஜகததங்கார ஸம்ருத்தா ஸ்வயாந்தா ।
தோ:ஷண்டஜ்ருஷ்டிஜ்ருஷ்ட
த்வீபாயந்யாவகாஸக்ருண வைகுண்ட்ய
ஜ்வாலா ஜாஜ்வல்யமாநா விதரது
பவதாம் ஸ்ரேயஸீ ஸ்ரேயஸீதாநி ॥ ௧ ॥

ஸ்ரீ:

பெருமாள்கோயில் பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்யர் இயற்றிய பதவுரையும் விசேஷவுரையும்.

கூரநாராயணாபிக்யஸுதீந்த்ரஸ்வாஸ்ரிதப்ரியம் ।
ஸ்ரீஸுதர்ஸநஸ்தோத்ரம் விவ்ருணோமி ஸதம் ஸுதே ॥

பதவுரை.

பாஹ்யாபாஹ்யாந்தகாரக்ஷதஜகததங்கார ஸம்ருத்தா	வெளியிலுள்ளதும் உள்ளுள்ளதுமான இருள்களாலே கெட்டுப் போன உலகங்கட்கு வைத்தியனாகும் பெருமையை யுடைய

ஸ்வீயா பாஸா	தனது ஒளியினால்
ஸாவித்ரீம் ச்ரியம்	ஸூர்யனுடையதான ஒளியை
திரஸ்க்ருத்ய	கீழ்ப்படுத்தி
திசி விதிசி	எல்லாவிடங்களிலும்
உஜ்ஜ்ரும்பமாணா	வியாபித்து விளங்குவதும்,
தைத்யை: ஸகண்டூத்ருப்தபுஜை: வைதவ்யவைதக்த்யதக்ஷா கண்டே கல்யேகல்யா	புஜங்களிலுள்ள தினவினால் மிகவும் கொக்கரிக்கின்ற அசுரர்களின் பெண்டுகளுடைய கழுத்துகளை[த் தாலியற்றதாக] சூன்யமாக்குவதில் வல்லமை பெற்றதும்,
ஜாஜ்வல்யமாநா	ஒப்புயர்வின்றி ஜ்வலித்துக் கொண்டிருப்பதுமான
ஸௌதர்சநீ ஜ்வாலா	திருவாழியாழ்வானுடையதான ஜ்வாலையானது
பவதாம் அபீஷ்டாநி	உங்களது விருப்பங்களை
வீப்ஸயா விதரது	அடிக்கடி தந்திடுக.

* * * இது முதல் இருபத்தினான்கு ச்லோகமளவும் திருவாழியாழ்வானுடைய ஜ்வாலையைப் பற்றின வர்ணனையாய்ச் செல்லுகிறது. அதில் இந்த ச்லோகத்தினால் சொல்லப்படுவது யாதெனில்;

உலகத்தில் இருள் இருவகைப்படும்; அகவிருள் என்றும் புறவிருள் என்றும். அகவிருள் அஜ்ஞாநாந்தகாரமெனப்படும்; புறவிருளென்பது ப்ரஸித்தமானதேயாம். இவ்விரண்டுவகையிருளாலும் தடுமாறுகின்ற உலகத்தவர்கட்கு அவ்விருளைத் தொலைத்தருளி வாழ்விக்கவல்ல வொளியினால் ஸூர்யனுடைய தேஜஸ்ஸைத் திரஸ்கரித்திருக்கும் ஸுதர்சந ஜ்வாலை. (ஸூர்யன் புறவிருளொன்றை மாத்திரமேயன்றோ போக்கவல்லன்.) அசுரர்களுக்கு எப்போதும் யுத்தம் செய்வதிலேயே உத்ஸாஹமாதலால் சண்டைக்கு யார் அகப்படுவார்களென்று அவர்களுடைய புஜங்கள் தினவுகொண்டு அதனால் அவர்கள் மிகவும் கொக்கரிப்பார்கள்; அன்னவர்களைத் தொலைத்து அவர்களது பெண்டிரைக் கைம்பெண்டாட்டிகளாக ஆக்கவல்லதுமான ஸ்ரீஸுதர்சந ஜ்வாலை உங்களுடைய அபீஷ்டங்களைப் பரிபூர்ணமாக்குக என்பதாம்.

[illegible] [illegible] என்கிற [illegible] என்னும் [illegible] முற்கொண்டு [illegible] யிருக்கிறது. [illegible] என்ற பாடமும் ஏற்கும்; பொருள் ஒக்கும். [illegible] மான என்றுமாம், ஸமர்த்தமான என்றுமாம். [illegible]

இந்த [illegible] முழுதும் [illegible]......... (க)

[illegible] ॥ (உ)

[illegible]	பூலோகத்தில்
[illegible]	மேரு பர்வதத்தினது காந்திகளி(னால்) ஸேவிக்கப் பெற்றதும்
[illegible]	ஆகாசத்தில்
[illegible]	ஸூர்யனுடைய
[illegible]	கிரணங்களினால்
[illegible]	எதிர்கொண்டு உபசரிக்கப்பட்ட
[illegible]	ஸ்வர்க்கலோகத்தில் (மு)ம்,
[illegible]	தேவர்களின் மாளிகைகளினுடைய (அல்லது) நக்ஷத்ராதி தேஜஃ பதார்த்தங்களினுடைய
[illegible]	ப்ரகாசங்களினால்
[illegible]	சிச்ரூஷை பண்ணப்பெற்றதும்
[illegible]	ஸர்வதிக்குகளிலும் சுழன்று வியாபித்து நெருங்கின தீப்பொறிகளை யுடையதும்

த்ரிபுவந விஜயவ்ரதம்	மூவுலகங்களையும் வெல்வதில் முயற்சியுடையதும்
(ஈதவளவ)	
ஜாக்ரத்ப்ரதாபம்	எப்போதும் விளங்காநின்ற தாப சக்தியையுடையதும்
உக்ரம்	(எதிரிகட்கு) பயங்கரமும்
சாக்ரம்	திருவாழியாழ்வானுடையதுமான
தத்	அப்படிப்பட்ட [ப்ரஸித்தமான]
தேஜ:	தேஜஸ்ஸானது
வ:	உங்களுக்கு
பூயஸே	மிகவும் அதிகமான
ஶ்ரியே	செல்வத்தின்பொருட்டு
ஸ்தாத்	விளங்குக.

* * * நான்காம் பாதத்திலுள்ள "த்ரிபுவந விஜய வ்ரதம்" என்ற விசேஷணத்தைப் பூர்வார்த்தமும் விவரிக்கிறது. "வாக்யார்த்தஸ்ய வாக்யார்த்த: விஶேஷணீயாத்" என்ற நியாயத்தை யடியொற்றி "பூமௌ ஶைலேந்த்ரஶ்ரீபி: த்யுஹாபி: த்ருதபுவம்" என்று முதலில் யோஜிக்கப்பட்டது; "த்ரயீவ்யோமாந்தரிக்ஷம் த்ருஷ்டிபி:" என்றிறே அடைவு.

பூலோகத்தில் மேருபர்வதத்தின் ஒளிகள் திருவாழியாழ்வானுடைய திவ்ய தேஜஸ்ஸுக்கு அடிமை செய்கின்றன வென்றது—மேருமலையின் நிரம்பிய ஒளிகளிற் காட்டிலும் மேம்பட்டு விளங்குவது ஸ்ரீஸுதர்சந தேஜஸ்ஸு என்றபடி. ஆகாசத்தில் இரவியின் கதிர்கள் எதிர்கொள்ளுகின்றனவென்றும், ஸ்வர்க்கலோகத்தில் தேவயோஷிதாம் த்ருஷ்டிகள் சிச்ருஷை செய்கின்றனவென்றும் சொன்னதற்கும் அதுவே கருத்தாம். எனவே மூவுலகங்களிலும் உள்ள தேஜோவிஶேஷங்களையெல்லாம் வென்று வீறுபெற்று விளங்குவது திருவாழியாழ்வானுடைய தேஜஸ்ஸு என்றதாயிற்று.

பின்னடிகளின் கருத்து ஸ்பஷ்டம். ஸுமேரோ: ஶ்ருங்கா:— ஶைலேந்த்ரஸ்ய, தாபி:. [தேவயோஷிதாம்] 'யோஷா' என்னும் பதம் ஸ்த்ரீ

ஹத்துக்கும் தேஜஸ்ஸுக்கும் வாசகமாகையாலே இரண்டுவகையான பொருள்களும் இங்கு விவக்ஷிக்கப்பட்டன. சுத்தம் பஹ்வீஹ்யஷ்வீ. ஸக்ருச்சேஷ்டம்..ஸக்ருத்.... (உ)

ஸம்பூர்ணம் ஸுதாரஸஸ்யந்தம் ஸமேதி ஸமதஸ்யேவ விதாநோதயே, பாஹாமாநாபரப்பூக்ஷதிக்ஷமாந்திவஸ்ஸக்ருரப்ஜ த்ருமஸ்ய! ஜ்யோதிஸ்ஸ்ரஸாங்பஸ்ஸ: ஸுகழிதஸம்ருத்தலக்ஷ்மீம் ஸ்மிதம் ஸம்பக்ஷ்ட், ஸம்பக்ஷ நாஸாரிம்நேஷு புஷ்டிரதா ஸ்வதாம் ஸஷு கஷ்டும் ஸூஹஷ்டும் ॥ (௩)

ஸுதாரஸ ப்ரவாஹை:	அம்ருதரஸ ப்ரவாஹங்களாலே
ஸம்பூர்ணம்	நிறைந்ததாயும்
ஸமேதி	மிக்க பெருமை பொருந்தியதாயுமிருக்கிற
ஸோமபிம்ப ரூபாஜே	சந்திரபிம்பமாகிற பாத்திரத்தில்
பஸத:	விளங்காநின்றதாய்
பாஹாமாநாபரப்பூக்ஷதி க்ஷமாந்திவ:	புஜங்களாகிற கிளைகளினுலே பூமியையும் ஆகாயத்தையும் ஸ்வர்க்கத்தையும் ஆக்கிரமித்ததாயுள்ள
ஸக்ருரபஜ த்ருமஸ்ய	திருவாழியாழ்வானுகிற கல்பவ்ருக்ஷத்தினுடைய—,
புஷ்பஸம்ருத்தஸ்ய	புஷ்பஸம்ருத்தியை விளக்குவதாயும் —தேவதைகளின் செல்வத்தை விளங்கச்செய்வதாயும்
ஸுராஸாஞ்சேஷு ஸதாம்லக்ஷ்மீம் ஸம்பஷ்ந்	திங்மண்டலங்களில் ஸிரோபூஷணசோபையைப் பெருக்காநின்றதாயுமுள்ள
ஜ்யோதிஸ்ஸாங்பஸ்ஸ:	ஜ்யோதிஸ்ஸென்னும் தளிரானது
ஸ்வதாம்	உங்களுக்கு
ஸம்பக்ஷ்டும்	மேன்மைபொருந்திய
ஸூஹஷ்டும்	ஸந்தோஷத்தை
ஸம்பதாம்	தந்திடுக.

* * * திருவாழியாழ்வானை ஒரு வ்ருக்ஷமாகவும் அவருடைய சோதியை ப்ரவாளமாகவும் ரூபணம் பண்ணிப்பேசுகிறார் இதில். உலகத்தில் வ்ருக்ஷமானது தண்ணீர் நிறைந்த பாத்தியில் விளங்கும்; சுற்றிலும் தழைத்தோங்குகின்ற கிளைகளையுடைத்தாயிருக்கும்; அத்தன்மை திருவாழியாழ்வானுக்கும் பொருந்தினபடி சொல்லுகிறது பூர்வார்த்தத்தில்.—அமுதவெள்ளம் நிறைந்த சந்திரபிம்பமாகிற பாத்தியில் விளங்காநின்றதாய்த்து ஸ்ரீஸுதர்ஸந வ்ருக்ஷம். சக்கரத்தாழ்வான் சந்திரமண்டலத்தில் விளங்குவதாகச் சொல்லுகிறவிதற்குக் கருத்து என்னென்னில்; ஸுதர்ஸநமந்த்ர ஸம்ஸ்காரக்ரமம் சொல்லுமிடத்து ஸ்ரீஸுதர்ஸநாழ்வான் சந்திரமண்டலத்தில் எழுந்தருளியிருக்கும் வண்ணமாகச் சொல்லப்பட்டிருத்தலால் இங்ஙனே அருளிச் செய்யப்பட்டது. "சந்த்ரபிம்பஸ்ய மத்யஸ்தம் தாரம் காயத்ரஸம்ஹிதம்। தஸ்ய மத்யே ஸ்திதம் தேவம் ப்ரத்யக்ஷம் ஸுதர்ஸநம்"। என்று அஹிர்புத்ந்யஸம்ஹிதையில் இருபத்தாறும் அத்யாயத்தில் (ஶ்லோ-5) சொல்லப்பட்டதிறே. இந்த ஶதகந்தன்னிலும், மேல் 'ப்ரணவஸமஸமயாராதநவ்யக்ரசக்ர' என்றும் "சந்த்ராய: காந்தியுக்தஸ்ஸுதர்ஸந:" என்றும் "ஸுதர்ஸநஸமயாம் ப்ரேக்ஷ்யதத்ரக்ஷ்யம்" என்றுமருளிச் செய்திருப்பவை இங்கே ஸ்மரிக்கத்தக்கன. உலகத்தில் வ்ருக்ஷம் தண்ணீர் நிறைந்த பாத்தியில் விளங்குவதுபோல் இந்த ஸ்ரீஸுதர்ஸந வ்ருக்ஷம் ஸுதாப்ரவாஹபூர்ணமான சந்த்ரபிம்பமாகிற பாத்தியில் விளங்காநின்றதென்றதாயிற்று.

வ்ருக்ஷமானது சுற்றிலும் தழைத்தோங்காநின்ற கிளைகளினால் கீழும் மேலும் இடமடைத்துக்கொண்டு விளங்குவதுபோல் இந்த ஸுதர்ஸந வ்ருக்ஷம் தனது திருக்கைகளாகிற ஶாகைகளினாலே ஊர்த்வாதோதிசைகளை யெல்லாம் இடமடைத்துக் கிடக்கிறதென்கிறது இரண்டாம் பாதம். நீண்ட கைகளைக் கிளைகளோடு ஒப்பிடுதல் கவி மரபு. "வக்ரதுண்டஶாகஸ்ய" என்றவிடத்து த்ருமஶப்தம் ஸாமாந்யமாயிருந்தாலும் இங்கே கல்பவ்ருக்ஷமாகிற விஶேஷத்துக்கு வாசகமாகக்கடவது. அன்றியே, த்ருமாணாம் ராஜா—ராஜத்ருமஃ, வக்ரஶ்சாஸௌ ராஜத்ருமஃ என்று வ்யுத்பத்தி பண்ணுவா

ரும் சிலருளர். வ்ருக்ஷத்தில் செந்தளிர் உண்டாகிறாப்போல் இந்த ஸுதர்சந வ்ருக்ஷத்தில் செவ்விய சோதியே ப்ரவாளமென்கிறார். [ப்ரகடிதஸுரநந்தநாபோகம்] பல்லவமானது புஷ்பஸம்பத்தை விளக்குமே; அப்படியே இந்த ஸுதர்சந ஜ்யோதிஃ ப்ரவாளமும் செய்யா நின்றதென்பதை ச்லேஷரீதியாலே சொல்லுகிறார். ஸுரநந்தநம் ஸ்வர்க்கத்துக்கும் தேவதைகளுக்கும் வாசகம். பல்லவமானது ஸுரநந்தநவாஸமான புஷ்பத்தின் ஸம்பத்தை ப்ரகடநம் செய்யும்; ஸுதர்சந ஜ்யோதிஃப்ரவாளமானது ஸுரநந்தநவாஸர்களான தேவதைகளின் செல்வத்தை ப்ரகடநம் செய்யா நிற்குமென்க. தேவர்களின் செல்வத்தைக் கொள்ளை கொண்டு அவர்களை நலிகின்ற அஸுரராக்ஷஸர்களை அழிக்கும் முகத்தால் ஸுதர்சநஜ்யோதிஸ்ஸானது தேவதாஸம்ருத்திப்ரகடநகாரியாகிறபடி. [குமாரீபிர்வதம்ஸத்வம் நீதம் ஸ்வர்ஷ்ணு.] மாதர்கள் பல்லவத்தை சிரோபூஷணமாகக் கொள்ளுவார்கள்; ஸுதர்சநஜ்யோதிஸ்ஸும் திக்குக்களில் சிரோபூஷணமாக விளங்கா நின்றதாய்த்து. திருவாழியின் சோதியானது திசைகள்தோறும் அழகிதாகப் பரவியிருக்கின்றதென்றபடி. 'குமாரீ'சப்தத்தின் ஸ்வாரஸ்யமும் நோக்கத்தக்கது.

இவைகளால் ப்ரவாளமென்னவமைந்த ஸுதர்சநஜ்யோதிஸ்ஸானது உங்கட்குச் சிறந்த மகிழ்ச்சியைத் தருகவென்றதாயிற்று. ... ... (௩)

ஶூராஹாராத்ஸஹஸ்ராத்வஸாதி விததக்ஷேபதக்ஷாத்ரக்ஷா
த், நாஸேஹஸ்ராஸ்வத்நாஸேநிர்ஜவிஸவபரித்ஸிந்நஸத்ரேஶ்வந்தேதே:
க்ஷுந்நாஸெயாரக்கணை:ஸத்ததஹிஹிதேஹாஶாயவீயஸ்ய ஹேதேஃ
தத்வோ திக்ஷு ப்ரதாநம் சதஸ்ருஷு சதுரஃ ஸாஸ்ருதாத்
ப்ரஹர்ஷாய பூயாத் ‖ (௪)

ஶாயவீயஸ்ய — எம்பெருமானுடையதான
ஹேதேஃ — திருவாழியினுடைய
யத்ஸஹஃ — யாதொரு தேஜஸ்ஸானது

ஸஹஸ்ராணாம் அராணாம்	ஆயிரக்கணக்கான அரஸமூஹத்தி னின்றும்,
விபக்ஷக்ஷபணதக்ஷாணாம்	எதிரிகளைத்தொலைப்பதில் ஸமர்த் தமான
அக்ஷாத்	அக்ஷத்தில் நின்றும்
ஸாவித்ரஸநாபே:	ஸூர்யனோடு ஒத்த
நாபே:	நாபியில் நின்றும்
நிஜமஹிமபரிச்சிந்நபூமண்டலாயா:	தனது பெருமையினாலே அளவி டப்பட்ட பூமியையுடைத்தான
நேமே:	நேமியில் நின்றும்
அராத் விஸரதி	எங்கும் பரவுகின்றதோ,
ஸகண்டை: ஶ்ருதிசயை:	ஒருமிடறான வேதங்களாலே
ஸ்துதமஹிம	துதிக்கப்பட்ட பெருமையையு
சதுராஶாந்தரவ்யாபி	நான்கு திசைகளிலும் [டையதும்
ஸமயிதம்	பரவுகின்றதுமான
தத் (தேஜ:)	அந்த ஸ்ரீஸுதர்சந தேஜஸ்ஸு
வ:	உங்களுக்கு
சதுர: புருஷார்த்தாந்	(அறம் பொருள் இன்பம் வீடெ ன்னும்) நான்கு புருஷார்த்தங்க
புஷ்ணாதாத்	பெருக்கத் தந்திடுக. [ளேயும்

* * *அரம், அக்ஷம், நாபி, நேமி—என்னுமிவை திருவாழியாழ் வானுடைய அவயவங்கள். அந்த அவயவங்கள் தோறும் கிளர்கின்ற ஜ்வாலையே ஸுதர்சந ஜ்வாலையாம். (அவயவஸமுதாயமே யிறே அவயவியாகிறது.) அதனுடைய புகழ் ஸகலவேதங்களிலும் பொலி யும். அத்தகைய ஸுதர்சந ஜ்யோதிஸ்ஸானது அறம் பொருள் இன் பம் வீடு என்ற நான்கு புருஷார்த்தங்களையும் உங்களுக்கு அளித் திடுக வென்கிறார்.

“அராதாராணாம்” என்ற இரண்டனுள் ஒன்று பஞ்சம்யந்தம்; ஒன்று அவ்யயம். அராணாம் ஸமூஹ:—ஆரம்; தஸ்மாத் என் று பஞ்சம்யந்தத்திற்கு வ்யுத்பத்தியாம். அதூரார்த்தோயம். “ஶதம், ஸஹஸ்ரம்” இத்யாதிஸங்க்யாவாசக பதங்களை விசேஷ

ஷணமாகவுடைய விஶேஷ்ய பதங்கள் ஸஹாநவநாதமாக இருக்கவேணும்; "ஶதம் பாத்ராநி, ஸஹஸ்ரம் பஶவ:" இத்யாதி உதாஹரணம். இவ்விடத்தில் ஸஹஸ்ராக ஈசேஹாஸ் என்றிருக்கவேணுமேயன்றி 'ஹூராக' என்று ஸாமாநாதிகரண்யமாயிருத்தல் பொருந்துமோ வென்று விசிகித்ஸை உண்டாகக்கூடியதே;

இதற்கு ஸமாதாநப்ரகாரங்கள் பலவுண்டு:—ஸஹஸ்ர வ வ்யாகக்கும் ஈாவஸசேஷத்தில் ஸாக்ஷாத்தாக அந்வயிப்பதல்ல; சேஷாவயவமான அரங்களில் அந்வயிக்கும்; ஸசேஷம் ஒன்றே யா கையாலே "ஹூராக" என்ற ஸாமாநாதிகரண்ய ப்ரயோகம் கூடும் என்பர் சிலர். இங்ஙனன்றியே, ஸஹஸ்ரஶப்தம் ஸஹஸ்ராவய வமாய் அதன்மேல் 'ஈஶேஷுக்ரஹ்வசா' என்றுகொண்டால் 'ஸஹஸ்ராவயவவிஶிஷ்டாக ஈாவசேஷாக' என்றதாகிறது என்பர் சிலர்; இங்ஙனுமன்றிக்கே, நடாதூர் அம்மாளருளிச்செய்த வரதராஜ பஞ்சாஶத்தில் "ஶ்ரீரங்கஹஸ்திகிர்யாதி ...

[illegible] என்ற ஶ்லோகத்தில் "... ஸ்தாநேஷு" என்னுதே "ஸ்தாநே" என்று ஸாமாநாதிகரண்ய ப்ரயோகம் காண்கையாலே அப்படியே இங்கும் கூடும் என்பர் சிலர். இங்ஙனே நிர்வஹிக்கும் புடைகள் பலகிடந்தாலும் ஹ்ருதயங்கமான நிர்வாஹம் ஒன்றுண்டு; அதாவது—ஈராணாம் ஸசேஷ: ஹூராஸ் என்று வ்யுத்பத்தி பண்ணுமல் 'ஈராணாம் ஸம்பந்தி ஹூரஸ்' என்று கொண்டு ஹூரபதத்தை விஶேஷணமாகவும் ஸஹஸ்ரபதத்தை விஶேஷ்யமாகவுங்கொண்டு "அரங்களினுடையதான ஆயிரத்தில் நின்றும்" என்று பொருள் கொள்ளுதல் மிக்கபொருத்தமுடையது. அரங்களினுடைய ஆயிரம் என்றால், ஆயிரம் அரங்கள் என்றே பொருள்படும்: "ஸஹஸ்ரம் மாயாநாம் ஶதஶேஷ நஸசேஷ ரிஷ்டே தநாக" "வேதாநாம் ஶதசேதநாக" இத்யாதிஸ்தலங்களில், ஸஹஸ்ரம் மாயா:, ஶதம்வேதா:—என்று பொருள்படுமாறுகாண்க.

இந்த ஶதகந்தன்னிலே "ஸுேஷீரநம் ஸுயஸம் வொ ஷிஶ தா ஷுஶஶதி ஷாஸ்ஸராணாசராணாம்" என்ற ப்ரயோகமும்

இங்கே த்ருஷ்டாந்தமாகப் பொருந்தும்; 'சரணம் த்ஸமஸ்தி'= ஸஹஸ்ரம் சரணி என்றபடியிறே.

இனி இவ்வழிகளைத்தவிர வேறுவழியுமுண்டாகில் அறிவிற் சிறந்தோர் அங்ஙனே உபபத்தி சொல்லிக்கொள்க.

'தூரக' என்ற சப்தம் "தூராந்திகஸமீபயோ:" என்ற கோஶத்தின்படி சேய்மை அண்மை என்னுமிருவகைப்பொருள்படும். நெடுந்தூரம் வரையில் என்று இங்கே பொருளாகக்கடவது. ஸமீபத்திலும் தூரத்திலும் என்றுமாம். "நிஜவிபவபரி ஷ்ணந்தே" என்ற நெடுவிஶேஷணம்—ஸ்ரீதேவநாயகநெடுஞ் யானது பூமியிற்காட்டிலும் மிக்க விஸ்தாரமுடைய தென்னுமிடத்தைத் தெரிவிக்கும். "தூராதே ரக்ஷணஸ்தர்க்க" என்னும் பாடமுண்டாம். ... ... (௪)

ஶ்யாமம் தாமவ்யாப்த்யா க்வசந பகவத: க்வாபி ஸஹஜ ப்ர
க்ருத்யா, ஶுப்ரம் ஶேஷஸ்ய பாஸா க்வசந மணிருசா க்வாபி
தத்வைஶ்வரக்தம் | நீலம் ஶ்ரீநேத்ரகாந்த்யா க்வசிதபி பீதாம்ப
ஸம்பத்வைஶ்வ பித்ரம், வ்யாப்நாநம் விதாநம் ஸ்ரீயபதே
பிந்தாம்பரம் வஸ்த்ரஹாநம் ॥ (௫)

க்வசந — ஓரிடத்தில்
பகவத: — எம்பெருமானுடைய
தாமவ்யாப்த்யா — திருமேனி நிறத்தின் வ்யாப்தியி
ஶ்யாமம் — பசுமைநிறத்ததாயும் [னாலே
க்வாபி — ஓரிடத்தில்
ப்ரக்ருத்யா ஸஹஜ — இயற்கையாகவே பிங்கள வர்ண
க்வசந — மற்றோரிடத்தில் [மாயும்
ஶேஷஸ்ய பாஸா — திருவனந்தாழ்வானுடைய ஒளியி
ஶுப்ரம் — வெண்ணிறமாயும் [னாலே
க்வாபி — மற்றுமோரிடத்தில்

தச்சேஷ — அந்தத் திருவனந்தாழ்வானுடை
ஃபணிரத்நபா — மாணிக்கவொளியினாலே [யிவே
ரக்தம் — சிவந்ததாயும்
க்வசித் — இன்னுமோரிடத்தில்
ஶ்ரீநேத்ரகாந்த்யா நீலம் — பிராட்டியினது திருக்கண்களின் காந்தியினாலே நீலநிறத்ததாயும்

(இப்படி நாநாவர்ணங்கள் விரவப்பெற்றமையாலே)

ஶுத்தஸ்ய த்விஜாநவஸ்ய — சுத்தம்பதிகளான பெரியபிராட்டியார்க்கும் பெரியபெருமாளுக்கும்
சித்ரம் விதாநஶ்ரியம் — விசித்திரமான மேற்கட்டியின் சோபையை
ஸ்ருஜாநமிவ ஸ்திதம் — விசேஷமாக உண்டுபண்ணுகின்றதுபோன்றுள்ள
சக்ரஹாஸம் — திருவாழியாழ்வானுடைய தேஜ [ஸ்ஸானது
வ: — உங்களுக்கு
ஸௌக்யம் உபசிநுதாத் — ஸௌக்யத்தை வளரச்செய்திடுக.

கார்முகில் வண்ணனை எம்பெருமானுடைய திருமேனி யொளியின்பரவுதலினால் சிலவிடங்களில் ஶ்யாமவர்ணமாயும், சிலவிடங்களில் இயற்கையாகப் பிங்களவர்ணமாயும், *அரவத்தமளியின் ஒளியினால் சிலவிடங்களில் ஸுவர்ணமாயும், அத்திருவனந்தாழ்வானுடைய திருமுடியில் விளங்குகின்ற மாணிக்கத்தின் ஒளியினால் சிலவிடங்களில் ரக்தவர்ணமாயும், குவளையங்கண்ணியான பிராட்டியின் திருக்கண்ணொளியினால் சில விடங்களில் நீலவர்ணமாயும் இப்படி பலவகை வர்ணங்கள் விரவப்பெற்றிராநின்ற ஸுதர்ஶந ஜ்யோதிஸ்ஸானது பெருமாளும் பிராட்டியுமாகிற திவ்யதம்பதிகளுக்கு விசித்ரவர்ணமான மேற்கட்டி கட்டினதுபோல் விளங்காநின்றதென்று ஒரு உத்ப்ரேக்ஷை தோற்றப் பேசினாராய்த்து. இப்படிப்பட்ட உத்ப்ரேக்ஷைக்கு ஆஸ்பதமான சோதியானது உங்கட்கு ஸௌக்யத்தைத்தந்திடுக.

இதில், ‘ஶ்யாமம்’ என்றும் ‘நீலம்’ என்றும் இரண்டு பதங்கள் உள்ளன; “க்ருஷ்ணநீலாஸிதஶ்யாம காலஶ்யாமல மேசகா:” என்ற

அமரகோஶத்தின்படி இரண்டையும் பர்யாயபதமாகக் கர்ணும வர்கள் பௌநருக்த்யம் ஶங்கிப்பார்கள். அங்ஙன் ஶங்கிக்கவேண்டா; அந்த அமரகோஶந்தன்னிலே நாநார்த்தவர்க்கத்தில் 'த்ருஷாஶ்ரேணி ஹரித்த்ருஷோ:" என்றிருப்பது அறியத்தக்கது.* பாசியின் பசும்புறம் போலு நீர்மை இங்கே ஶ்யாமபதத்தால் விவக்ஷிதமென்க. [பப்ரு] தபஶ்ஶிவாதாம்ரவர்ணத்தை பப்ருவர்ணமென்பார்கள். ஸா வித்ரஜ்யோதிஸ்ஸின் இயற்கையானநிறம் இதுவாம். [ஶேஷஸ்ய] "சென்றால் குடையாம்" இத்தியாதிப்படியே ஸர்வாவஸ்தைகளிலும் சுவிநாஶ்ரிதனான திருவனந்தாழ்வானுடைய வென்மை. ஶ்ரேய ஸ்வபாவமிறே அவனது. — ... (ரு)

ஶம்ஸந்த்யுந்மேஷம் உத்க்ராஸிதபரமஹஸோ ஸவிது: கைடபாரே:, ஸந்த்யேவ ஸந்த்யேவ நக்தஞ்சரவிஜயகரீ யா ஜகத்வந்தநீயா। ப்ரத்யக்ஷப்ரத்யக்ஷவிபதிதபதவேதவித்வேஷிஸா, ராதாங்கீ ரஶ்மிஸ்ரக் புண்யதா ஸவதாம் ப்ரத்யூஹாந்தாநதேந: ॥ ‖ கா

ராதாங்கீ — திருவாழியாழ்வானுடையதான

யா ரஶ்மிஸ்ரக் — யாதொரு ஜ்வாலாவலியானது

உத்க்ராஸிதபரமஹஸ: ஸவிது: — சந்திரன் முதலிய மற்ற க்ரஹங்களினுடைய தேஜஸ்ஸைக் கவளீகரித்திருக்கின்ற ஸூர்யனுடைய

உந்மேஷம் ஶம்ஸந்தீ — உதயத்தைத் தெரிவிக்கின்ற

ஸந்த்யேவ — ப்ராதஸ்ஸந்த்யைபோல

உத்க்ராஸிதபரமஹஸ: கைடபாரே: — இதர பதார்த்தங்களெல்லாவற்றினுடையவும் தேஜஸ்ஸை இல்லை செய்திருக்கிற எம்பெருமானுடைய

உந்மேஷம் — மஹாதிஶயத்தை

ஶம்ஸந்தீ — விளங்கச் செய்யாநின்றதாய்,

நக்தஞ்சரவிஜயகரீ — இரவில் திரிகின்ற துஷ்ட ஜந்துக் களுடையவும் (2) ராக்ஷஸர்களுடையவும் நாஶத்தைச் செய்யாநின்றதாய்

ஜகத்வந்த்யா	எல்லாவுலகத்தாலும் உபாஸிக்கத் தக்கதாய்
பந்தூகப்ரஸவாப பந்துரவி ஸ்பூர்ஜித ஸந்த்யாப்ரபாபிஃ	கோங்குமலர்களின் காந்தியோ டொத்த காந்தியோடு சேர்ந்ததிசை களினால் பெருக்கமுற்ற விளங்குகின்றதோதாய்
தேஜ	அந்த ஸௌதர்சந ஜ்வாலையானது
வ:	உங்களுடைய
ஸௌதாரம்	
ப்ராத்யஹிகம் ஏந:	நாள்தோறுமுண்டாகும் பாபத்தை
ப்ரணுததாத்	போக்கடிக்கவேணும்.

திருவாழியாழ்வானுடைய ஜ்வாலாவைபவத்தை ப்ராதஸ்ஸந்த்யை யோடு ஒப்பிட்டுப் பேசுகிறார் ச்லேஷஸக்தியாலே. ஸந்த்யையானது [உத்ப்ரேக்ஷிதபாஸ்வத்ஸுதர்சநா ஸர்வதஃ உந்மேஷம் ப்ராப்தவதீ —] ஸர்வ தேஜஃ பதார்த்தங்களினுடைய ஒளியை யெல்லாம் உள்ளடக்க வல்ல ஸூர்யனுடைய உதயத்தைத் தெரிவிக்குமாபோலே ஸௌதர் சநஜ்வாலையானது [உத்ப்ரேக்ஷிதபாஸ்வத்ஸ்ஸ்ர்வ தேஜஃ ஸாரோந்மேஷம் ப்ராப்தவதீ —] ஸர்வதேஜஸ்ஸுகளின் தேஜஸ்ஸையெல்லாம் ஸங்க்ரஹிக்கவல்ல ஸ்ரீரங்கநாதனுடைய உந்மேஷமுண்டு ஸூசித ஸம்பாதிதாயும்; அதனை விளக்கா நிற்கும். [நக்தஞ்சரவிஜய கரீ] இரவில் திரியும் க்ரூர ஜந்துக்களெல்லாம் ப்ராதஸ்ஸந்த்யை வந்தவாறே உள்ளடங்கும்; நக்தஞ்சரர்களான அஸுரராக்ஷஸர்கள் ஸௌதர்சநஜ்வாலையைக் கண்டவாறே நாசமடைவர்கள்.

[ஜகத்வந்த்யா] "ஸந்த்யாமுபாஸதே" என்று உலகெல்லாம் வணங்குமிறே அதை; இங்கும் "வடிவார் சோதிவலத்துறையுஞ் சு டராழியும் பல்லாண்டு" என்றதாருண்டோ?

[பந்தூகப்ரஸவாப்யாதி.] ப்ராதஸ்ஸந்த்யாகாலத்திலே ஸூர்ய னுடைய செவ்விய சோதிகள் எங்கும் பரவுகையாலே தாராபதிக ளைவராசிகள் தமது கரிய நிறம் மாறிச் செம்மைபெற்று விளங் கும். ஆனபின்பு, பந்தூகப்ரஸவங்களின்சோதியோடொத்தசோதி

யாதொன்றுண்டு ப்ராதஸ்ஸந்த்யாகால ஸூர்யனுடைய சோதி, அதனோடு கலசிச் செவ்வியவாகி விளங்குகின்ற மேகங்களாலே நிபிட மாயிருக்கும் ஸந்த்யா; ப்ராதஸ்ஸந்த்யையும் இப்படியேயிராநின்ற றதாய்த்து;—பந்தூகபுஷ்பத்தின் சோதிபோன்ற சோதியையுடைய ஸூர்யகிரணங்கள் மற்ற ஸகல தேஜஸ்ஸுகளையும் திரஸ்கரித்துத் தாமே வீறுபெற்று எங்கும் பரவுகின்றமையால் காளமேகங்களும் தம் நிறம் கெட்டு இந்தச் செந்நிறத்தையே கொண்டனவாகி விளங்குதல்பற்றி, ஸந்த்யாகாலத்திலே ஸந்த்யாபிவந்தனங்களான வந்தனங்களாலே ஸேவ்யமானதையாயிற்று ப்ராதஸ்ஸந்த்யை. இத்தால், மேகங்களை சிவக்கடிக்கவல்ல சோதிப்பெருமை ஸூர்யகிரணங்களுக்கு உள்ளவாறு சொல்லிற்றாயிற்று. இப்படிப்பட்ட ஸூர்யஜ்யோதிஸ்ஸானது [ஸவிதா ப்ரத்யஹம் ப்ரதிதேந: ப்ரணாசயது.] ஸந்த்யையோடு ஸார்த்தம் சொன்னது போலவே காயத்ரியிலும் ஸார்த்தம் திருவுள்ளம் பற்றுகிறார்; “தேந ஸவிதா ஸர்வஸ்ய......யதபாபகோஷம்...யதித்து ப்ரிதாரயி...தஸ்ய ஸவிதுர்ப்பர்க்கம்” என்று அது செய்யும் நித்யபாப நிபர்ஹணமாகிற காரியத்தையே இதுவும் செய்யக்கடவதென்கிறார். ஸந்த்யாகாலம் ஸாயம்—ஸந்த்யோபாஸநம், என்றாகும். “ஸாயம்ப்ராதஸ்ஸந்த்யே” இதி வாணிநிஸந்துர்......

ஸார்த்தம் ப்ரஸந்த்யாபந்தூகஸந்த்யா ப்ரகடயதி நஷ்டப்ராககாநந காநி, ஸம்ஸ்ருஷ்டம் யாதி காந்தம் திசதி யதுதிய தேராஜ்ஞாபஜ்ஞாம் ! கஷ்டப்ரஷ்டாதிப்ரேக்ஷ்யம் ஹரதி திநநிபாதஸ்ஸம்ப்ரஹ்ஸ்ம ஸாஸந, ஜாஜ்வலத்ப்ராதிபஸ்த: ப்ரஹாரணபதிஜம் யாதி ஸஞ்சித்யநோது ॥ (எ)

யதுதயஸமயே யாதொரு ஸூர்யஜ்வாலை கிளருங்காலத்தில்

நஷ்ட: ஆகாசமானது

தூ⁴மஸ்தோமஸ்ய ஸாம்யம் ப்ரகடயதி	புகைத்திரளின்ஸமுதாயத்தோடு ஒற்றுமையைத் தெரிவித்துக்கொள்ளுகின்றதோ,
தாரகாஜாலகாநி ஸ்பு²லிங்க³காந்திம் யாந்தி	நக்ஷத்ரஸமூஹங்களானவை தீப்பொறிகளினது ஒளியை அடைகின்றனவோ,
மேரு: அலாதஶங்காம் தநோதி	மேருமலையானது கொள்ளிக்கட்டையென்கிற ஶங்கையைத் தருகின்றதோ,
அக்³நி: த³க்³தா⁴ர்சி: வைலக்ஷ்யம் ஜஹாதி	அக்நியானது ஒளிமழுங்கப்பெற்றதாய் (ஸௌதர்ஶந ஜ்வாலையிற் காட்டில் வேறுபட்டு விளங்கமுடியாதபடி அத்தோடு) ஒற்றுமையை அடைந்துவிடுகிறதோ,
தி³நரஜநிகரௌ தீ³ப்திஹீநௌ ஜ்வாலாவ்ருத்தாவிவ ஸ்த:	ஸூர்ய சந்திரர்கள் தேஜஸ்ஸை இழந்தவர்களாய் ஜ்வாலையின் வட்டம்போல இருக்கின்றனரோ,
தத்தத் ப்ரஹரணபதிஜம் தா⁴ம வ: ப்ரீணாது	அப்படிப்பட்ட திருவாழியாழ்வானிடத் துண்டான தேஜஸ்ஸானது உங்களை ஸௌக்கியப்படுத்துக.

திருவாழியாழ்வானுடைய சோதி கிளருங்காலத்து மற்ற தேஜஃபதார்த்தங்களெல்லாம் ஒளிமழுங்கி கவலக்ஷமாம் படியைப் பேசுகிறார் இதில். பலபல தேஜஃபதார்த்தங்கள் நிறைந்து விளங்குகின்ற ஆகாஶமண்டலமானது சக்ர ஜ்வாலையின் முன்னே ஒளிகெட்டு 'இது புகைக்கூண்டு' என்னும்படியான நிலைமையை அடைகின்றது; நக்ஷத்ர ஸமூஹங்களெல்லாம் 'இவை க்ஷுத்ரமான நெருப்புப் பொறிகளாம்' என்னவேண்டும் நிலைமையை யடைகின்றன. மேருமலையானது 'இது அலாதமோ' என்று ஶங்கிக்கும்படியாகின்றது. அக்நி

உத்யோன காஷ்டத்துக்கும் அஸ்தமய ஸந்நமான காஷ்டத்துக்கும் நஷ்டாக்நியான காஷ்டத்துக்கும் அங்காரமென்று பெயருண்டு. இவற்றுள் ஏதேனுமொரு பொருளை இங்கே கொள்க. அக்நியானது தனது ஒளியெல்லாம் மழுங்கப்பெற்று ஸாத்யாதநா ஞையில் அநுபாவத்தை அடையுமத்தனை யொழியத் தானொரு தேஜ:பதார்த்தமாகத் தனித்து விளங்கப்பெறாது. இனி ஸூர்ய சந்த்ரர்களோ வென்னில்; தங்களுடைய தேஜஸ்ஸு போனவழி தெரியாமல் ஒளியிழந்து, சிறுவர்கள் மாவலியாடும்போது நிவட்டம் காணப்படுமே அதுபோலவாகாநின்றார்கள்.

இப்படியாலே ஸகல தேஜ:பதார்த்தங்களையும் உருவழித்து எங்கும் மேம்பட்டு விளங்காநின்ற ஸாத்யாத ஜ்யோதிஸ்ஸானது உங்களை மகிழ்விக்கவேணுமென்றதாயிற்று.

[பரிதீப்யா] பரிதோபாவ ஸதீப்தா:—பரிதீப்யா. அத்ர தத்ர கரணத்தில் "வாயவாதிப்யோ யத்" என்ற ஸூத்ரம் இதற்கு நிர்வாஹகம். வாயவ்யா, க்ருத்யா, ஸந்த்யா, ஸாத்யா, ஜநத்யாதிவத். "தாரகாஜாலகாநி" = நக்ஷத்ர ஸமூஹங்களென்று பொருள்கொண்டால் ஜாலஶப்தாத் ஸ்வார்த்தே கப்ரத்யய: என்று கொள்ளவேணும்; அன்றியே, "க்ஷாரகோஜாலகம் க்லீபே கலிகா கோரக: புமாந்" என்ற அமரகோசத்தின்படி பொருள் கொண்டால், 'புதிய அரும்புபோன்ற நக்ஷத்திரங்கள்' என்று கொள்ளலாம். ஸ்வபாவோக்தி நாமாலங்காரம்—ஸௌளவிஷ்டீ. ... ...(எ)

உத்யத்வ்யோமவக்த்ரம் விகசநவஜபாஸந்நிபாபோ ஸகாஶ:, ஸஹஸ்ராம்ஶுஸஹஸ்ராம்ஶுரேகஸ்வரூபீதி கமலநாபதோ வேதாந்தோதவஸ்யாம் நிஷ்ட்வோ யேநிவ்ருத்தோ விபாதிவ ஸஹ ஸாவஸாக்ஷாத்ப்ரவர்த்ய நேத்ரே, வாஸுதேவ ஸம்ஶ்ரயம் தே வ்யூதஸ்ய ஹிதமிஹதயே ஶாநவோ ஸாஶ்வதா வ: ॥ (அ)

விகசநவஜபாஸந்நிபாபோ } அப்போதலர்ந்த ஜபாபுஷ்பத்தோ
வக்த்ரம் } டொத்த திருவாழியாழ்வான்

அம்பரே த்ருஷ்டமாத்ரே	ஆகாசத்தில் காணப்பட்டவளவில்
ஸ்வர்பாநு:	ராஹுவானவன்
“ஏஷ: பாநு: ஸ்யாத்” இதி மத்வா	“இதோ தென்படுகின்ற இப்புருஷன் ஸூர்யனேயாவன்” என்று நினைத்தவனாய் [ஸூர்யனென்று நினைத்தாலே]
வேகத:	வேகமாக
அஸ்ய ஸகாஶமாகத:—	இத்திருவாழியாழ்வானுடைய அருகே வந்தவனாய்

(அவ்வளவில்)

யை:	எந்த ஸுதர்ஶநகிரணங்களினாலே
நிஷ்டப்த:	மிகவும் தபிக்கப்பட்டவனாகி
நிவ்ருத்த:	திரும்பிப்போனவனாய்
அத்யாபி	இன்றளவும்
ஸூர்யம்	ஸூர்யனை
விதுமிவ	சந்திரனைப்போல
ஸஹஸா ஸ்ப்ரஷ்டும்	சீக்கிரமாகத் தொடுவதற்கு
நேஷ்டே	அஸமர்த்தனாயிராநின்றானோ,
தே	அப்படிப்பட்ட
பாஸ்வரா: பாநவ:	மிக விளங்குகின்ற ஸுதர்சநகிரணங்களானவை
வ:	உங்களுடைய
அஹிதவிஹதயே	சத்ருவிநாசத்தின் பொருட்டு
படிஷ்டா:	ஸமர்த்தங்களாயிடுக.

உலகத்தில் ஸூர்யக்ரஹணம், ஸோமக்ரஹணம் என்ற இரண்டனுள் ராஹுவுக்குச் சந்திரன் பிடிபடுவது சீக்கிரமாகவும் ஸூர்யன் பிடிபடுவது விளம்பமாகவும் நிகழ்வது வழக்கம்; இதற்கு ஒரு ஹேதுவை உத்ப்ரேக்ஷிக்கிறமுகத்தாலே ஸுதர்சநஜ்யோதிஸ்ஸின் ப்ரதாபாதிசயத்தைப் பேசுகிறார். அப்போதலர்ந்த ஜபாபுஷ்பம்போல் செக்கச்செகவென்றிராநின்ற திருவாழியாழ்வானை ஒருகால் ஆகாசத்திலே கண்ட ராஹுவானவன் ‘இதோ ஸூர்

3

யன் கிடைத்துவிட்டான்; இவனைப் பிடித்துக்கொள்வோம்' என்றெண்ணி ஸூர்யப்ராந்தியாலே ஸுதர்சநாழ்வானருகே விரைந்தோடிவந்தானும்; உண்மையில் அந்த வ்யக்தி ஸூர்யனல்லாமல் திருவாழியாழ்வானாயிருந்தபடியாலே அவருடைய கிரணங்களாலே நன்கு தபிக்கப்பட்டு மீண்டொழிந்தவனான அந்த ராஹுவானவன் அதற்குப் பிறகு மெய்யான ஸூர்யனிடத்தில் போவதற்கும் அஞ்சி 'இவன் ஸூர்யனேயாவன்' என்கிற நிஸ்ஸம்சயவிஷயமான நிச்சயத்தைப் பெற்றபின்பே இவனருகே போகலாமென்றெண்ணி, சந்திரனை எப்படி சீக்ரமாகப் பிடிக்கிறானோ அப்படி ஸூர்யனைப் பிடிக்கமாட்டாமல் விளம்பியாநின்றானென்று உத்ப்ரேக்ஷையிருக்கிறபடி. எனவே, ராஹுவுக்கு ஸஹ்யமான ஸூர்யஸந்தாபம்போலன்றிக்கே ஸுதர்சநஸந்தாபம் அவனுக்கு அஸஹ்யமாயிற்றென்றதாய்த்து. இப்படி ஸூர்யனிற்காட்டிலும் அதிசயிதஸந்தாபராய் விளங்காநின்ற திருவாழியாழ்வானுடைய கிரணங்களானவை உங்களுடைய பகைவர்களைப் பாற்றவேணும்.

ப்ராந்தி—அயிப்ராந்தி இதி விஸர்க்கலோபச்சாந்தஸ:. ஜவா =செவ்வரத்தை. நிச்சேஷம் யதா ததா தவ்ய: நிஷ்டவ்ய:. (அ)

தேவம் மேருத்துங்கம் ப்ருதுபுஜசிகரம் பிப்ரதீம் மத்யதேசே, நாபீத்வீபாபிராமாம் ரவிவிநவதீம் சேஷசீர்ஷாஸநஸ்தாம்। நேமிம் பாதாளமூலாம் க்ஷிதிகநகிரணாத்ருஷ்டசீக்ஷ: வஹந்த்யா, ஸ்ரீசக்ரஸ்ய ப்ரபாவாவளி இவ விலஸந்நஸ்து திவ்யாஸ்த்ரதீ: ॥ (கூ)

ப்ருதுபுஜசிகரம் — பருத்த புஜங்களாகிற சிகரங்களையுடையனாய்
மேருத்துங்கம் — மேருமலைபோல் உயர்ந்தவனான
தேவம் — ஸுதர்சநபுருஷனை
மத்யதேசே பிப்ரதீம் — நடுவிடத்தில் வைத்துக்கொண்டிருப்பதும்
நாபீத்வீபாபிராமாம் — நாபியாகிற தீவினாலே அழகிதாயிருப்பதும்

அராளிவநவதீ	அரங்களாகிற காடுகளையுடையதும்
ஶேஷஶீர்ஷாஸநஸ்தா	திருவனந்தாழ்வானுடைய முடியாகிற ஆஸநத்தின்மீது இருப்பதும்
(ஸுதர்ஶந) பர்யாயஸ்ருஷ்டி:	பூமியின் வேறொரு வடிவு படைத்ததுமான [ஸ்ருஷ்டியோடொத்த]
நேமிம் பரீத்ய	நேமியைச்சுற்றி
விலஸதி	விளங்கிக்கொண்டிருக்கிற,
திக்மகர கிரணாஸ்ப்ருஷ்ட ஸீம: சக்ரவாலாசல இவ ஸ்தித:	ஸூர்யகிரணங்கள் கண்டறியாத ப்ரதேஶத்தையுடைய[எல்லையையுடைய] லோகாலோக பர்வதம் போன்ற
திவ்யாஸ்த்ராக்நி:	ஸ்ரீஸுதர்ஶநஜ்வாலையானது
வ:	உங்களுக்கு
ப்ரீத்யை ஸ்தாத்	ப்ரீதியின்பொருட்டு ஆயிடுக.

திருவாழியாழ்வானுடைய நேமியைச் சுற்றி அவருடைய ஜ்வாலை விளங்கும்படியைப் பார்த்தால் பூமியைச் சுற்றி லோகாலோக பர்வதம் விளங்குவதுபோல் உத்ப்ரேக்ஷிக்கலாம்படி யிருக்கையாலே அங்ஙனே உத்ப்ரேக்ஷித்துப் பேசுகிறார் இதில். நேமியை ஸ்ருஷ்டியாக ரூபணம் பண்ணுவதற்கு இன்றியமையாத உபபத்திகள் பூர்வார்த்தத்திலே சொல்லப்பட்டன. "திக்மகரகிரணாஸ்ப்ருஷ்டஸீம:" என்ற விஶேஷணத்தால் லோகாலோக பர்வதத்தோடு திவ்யாஸ்த்ராக்நிக்குள்ள ஸாத்ருஶ்யம் நிர்வஹிக்கப்படுகிறது.

ஸ்ருஷ்டி எங்ஙனேயிராநின்றதென்றால்; பெரிய சிகரத்தையுடைய மேருமலையைத் தன்னிடையே தரித்துக்கொண்டும், தீவு, காடு, முதலியவற்றை யுடைத்தாயும், திருவனந்தாழ்வானுடைய திருமுடியின்மீது உள்ளதுமாயிராநின்றது; ஸ்ரீஸுதர்ஶந நேமியும் அங்ஙனே யிராநின்றதோ வெனில்; ஆம்; நேமிமத்யத்தில் ஸுதர்ஶந புருஷன் எழுந்தருளியிருப்பதானது மேருமலை திகழ்வதொக்கும். அப்புருஷனுடைய பருத்த புஜங்களானவை அம்மேருமலையின் பரிவாரஸ்தாநீயமாம். நாபியென்கிற அவயவம் தீவுபோன்றுளது; அரங்களானவை காடுகள் போன்றுள்ளன; இனி ஶேஷ

ஸீஷ்டார்ஸநங்களும் ஒக்கும்; ஸாத்மபோத யஜுர்த்தில், அப்படிப் பட்ட ஸகலவேதம் ஸாஸ்த்ராக்ஷரும் ஜாத்யக்ஷிகளுமிறே. இப் படிகளாலே ஸூர்யனின் கவாஸபர்யாயமாயிராநின்றதாய்த்து மேரு ஸூர்யனைச்சுற்றி லோகாலோகமென்னும் பர்வதம் வி ளங்குவதும், அம்மலையில் * இரவியின் கதிர்கள் நுழைதல் செய்தறி யாத ஒரு ஸ்தலமுள்ளதும் புராணப்ரஸித்தம். திவ்யாஸ்த்ரஸ்ரீக்கு அம்மலையோடு ஸாம்யம் ஸம்ஸ்லேஷத்தாலே வரக்கடவதத்தனை. ‘தேநகாரகிரணை: கஷ்டஷ்டா வீரா பஸ்யஸ:’ என்கிற விஸ்ஷணம் உபயபக்ஷத்திலும் ஒக்குமாகிலும் பொருளில் வாசியுண்டு. பர்வதபக்ஷத்தில் வீராஸத்திற்கு ஸூர்யனென்று பொருள்; ஸூர் யகிரணங்களாலே பார்க்கப்படாததொரு இடத்தையுடையது அது. திவ்யாஸ்த்ரஸ்ரீயோவென்னில்; ஸூர்யகிரணங்களால் காணப்படாத எல்லையையுடையது; ஸூர்யகிரணங்களாலும் எல்லைகாணமுடியாத தென்றபடி. உத்தாஹஸ்வதாலும் கவசிஷ்டமென்றால் தபவெ க்ஷயாவ்யாக்யாதம் என்றதாமிறே.

இப்படிப்பட்ட ஸாத்மபோதஜ்யாதிஸ்ஸானது உங்களுக்கு நித்யஸந்தோஷப்ரதமாகக் கடவதென்றாராயிற்று. ... (கூ)

ஸகல லோகஸ்ய பக்ஷதிவ்யைபோதக கஸ்ய நஸ்த்ரநேத்ரு, ஊர்த்வமார்த்தாநம் பதாகாபமணம் பக்ஷ தாம ஷ்புணார்யு | ஸவாஸிரேம்ஸி தாஷ்டாவதநகிரண ஸ்ரேணி ராஜ்யபாம்ஷு, பயஸ்யாக்மூதாமூர்வயபஸிவஷ்ய ஜ்யாதி ஸ்ரீதீஸஹஸ்யு || (௮)

லோகஸ்ய ஸகலம் பக்ஷ:	உலகத்துக்கு முக்கியமான கண் போன்றதும்
திவியம் கஷ்ட கவதாஷக	புண்யபாபரூபமான இருவகைக் கருமங்களையும் போக்கடிப்பதும்
நஸ்த்ரநேத்ரு	முக்கண்ணனை சிவபிரான் வண ங்கப் பெற்றதும்

ததாநம் புருஷார்த்தாம் சதுர	நான்கு புருஷார்த்தங்களையும் அளிப்பதும் [விப்பதும்
அரிகணம் பஞ்சதாம் ப்ராபயத்	பகைவர் கூட்டங்களை நாசமடை
ஷாட்குண்யாட்யம்	(ஞானம் சக்தி முதலிய) ஆறு குணங்களை நிறையப்பெற்றதும்
ஸப்தார்ச்சிப்லோஷிதாஷ்டாபத நவகிரணச்ரேணிராஜ்யத்ப்ரபா பாடலம்	தீயில் காய்ச்சப்பட்ட ஸ்வர்ணத்தினதுபோன்ற புதிய கிரணவரிசையால் சிவக்கின்றபக்கத்துத் திசைகளையுடையதுமான
ஸுதர்சநாக்யம் பரிப்ருட ஜ்யோதி:	ஸ்ரீ ஸுதர்சந ஜ்யோதிஸ்ஸானது
வ:	உங்களுடைய
ஸஹஸ்ரம் ஆர்த்தீ:	பலபல துன்பங்களையெல்லாம்
வ்யபோஹ்யாத்	தொலைத்தருள்க.

இந்த ச்லோகத்தில் 'ஏகம், த்வி, த்ரி' என்று ஒன்று முதல் பத்துவரையிலுள்ள எண்களுக்கும் நூறு ஆயிரம் என்னும் எண்களுக்கும் வாசகமான பதங்களின் விந்யாஸக்ரமம் நோக்கத்தக்கது. இந்த ச்லோகத்தைக் கடாக்ஷித்தே ஸ்ரீவேதாந்த தேசிகனும் கருட பஞ்சாசத்தில் (5) 'ஏகோ விஷ்ணோர் த்விதீய ஸ்த்ரிவதநவிஹிதம் பஞ்சவர்ணாஹ்வயம் ஷாட்குண்ய ஸ்ப்ராக் ஸப்தஸ்வரமதிரணிதா ஷ்டாஸ்யஷ்ட ஸ்வஷ்டநவாஷ்டா । தேவோ தசவித்யுகராசிதப்ரஸ்தநயநாநதி ஸாஹஸ்ரபக்ஷ விக்ஷேபக்ஷேபகோடி விதபயதா ஜயம் வீதஸம் வேதயோநி:॥" என்ற ச்லோகத்தையருளிச்செய்தார். இவர் ஆயிரத்தோடு நிறுத்தினார்; அவர் அதற்குமேலும் பேசினார் என்று வாசி காண்க.

இதில் "அரிகணம் பஞ்சதாம் ப்ராபயத்" என்றவிடத்தில் ஐந்து என்ற எண்ணுக்கும் "நவகிரணச்ரேணி......" என்றவிடத்தில் ஒன்பது என்ற எண்ணுக்கும் பொருள்வகையில் தோற்றமில்லையாகிலும் ஸஹ்ருதயதியிலே ப்ரபூத: ஸம்ப்ரதிபத்தி உண்டாகுமென்கிறவத்தனையே விவக்ஷிதம்; திருவெழுகூற்றிருக்கையிலும் இப்படியே யிறே காண்கிறது.

[த்விவிதம் கர்ம க்ஷபயந்நேஷ:] புண்யபாபரூபமான இருவகைக்கருமங்களையும் தொலைப்பது என்கை; பாபத்தைத்தான் தொலைக்கவேணும், புண்யத்தையும் தொலைக்கவேணுமோ வென்னில்; ஆம்; பாபம் நரகாவஹம்; புண்யம் ஸ்வர்காதி க்ஷுத்ரபலாவஹம். ஒன்று இருப்புவிலங்கு; ஒன்று பொன்விலங்கு. "ததா வித்வாந் புண்யபாபே விதூய நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி" என்னுமதிகாரிக்கு இருவினைகளும் தொலையவேணும்: "சார்ந்த இருவல்வினைகளும் சரித்து" என்றார் ஆழ்வாரும்.

[ரதாங்காவயவஶ்ரேஷ்டஜ்யோதி:] "ரதாங்கஸ்யந்தநோ ரத:" என்ற அமரகோஶத்தின்படி ரதாங்கஶப்தம் ரதவாசகம்; அதனுடைய அவயவங்களில் [ஶ்ரேஷ்டம்] சிறந்தது—சக்ரம். [ஸம்த்ஸ்ஸஹஸ்ரேஷு]. "க்ஷத்ரியாஷ்டநாயகாஷ்டஷ்ட்ஷகாஸ்ஸஹஸ்ர: வமா:। க்ஷத்ராஸ்ந்யாஸ்து ராஜாநஷ்ஷஷ்டதா ஸந்தயஸ்ஸ்ருதா:" என்று ஸந்திகள் விஶேஷித்துச் சொல்லப்பட்டிருந்தாலும் இங்கே ஸர்வஸாதாரண்யம் விவக்ஷிதமென்க... ... ... (கம)

உத்தண்டம் யத்விதண்டம் நிபிடயதி நப:க்ஷேத்ரமர்க்காம்ஶுஸம்ஹதி ந்ராம், க்ஷ்வேல்யா ஸ்ருஷ்டாபரூஷிதவஸ்தாரவோ விஶ்வதீ ரஸ்யாவஸ்தீக்ஷ்ண: யத்த்ர ஸாக்ஷாத்ஸ்ய ஸ்பஷ்டாத்ஸ்ய விமாரவஸ்யாந: க்ஷீணஶ்ரேஷ்டகோஶவஸ்ய ஸாம்யம், ரக்ஷந்த்ஸ்வஷ்டூஷோஷ்ட ரக்ஷித ஸாரதீர்வ்யாஷ்டயோ வ்ருஷ்டயோ வ: ॥ (கக)

உத்தண்டம் — (பகைவர் திறத்தில்) மிகவும் தீக்ஷ்ணமான

யத்விதண்டம் — யாவை சில ஸுதர்ஸந கிரணங்களின் பரிவாஹதேஶமானது

நப:க்ஷேத்ரம் — ஆகாஶக்ஷேத்ரத்தை

நிபிடயதி ஸதி — நெருக்கா நின்றவளவில்

அர்க்க: — ஸூர்யனானவன்

ப்லுஷ்டத்ராஸத்ருஷிதவபுஷா	மிக்க தாபத்தினால் வாட்டப்பட்ட வடிவையுடையவனைக்கொண்டு
கபந்தப்ருத்பி: கந்தவத்பி:	ஜலத்தை ஏந்திக்கொண்டிருக்கிற மேகமண்டலங்களில்
காஹ்யகாஹ்ய	அடிக்கடி அவகாஹித்து
வ்யோம்நி சரதி	ஆகாயத்தில் ஸஞ்சரிக்கிறானே.
விது:	சந்திரனானவன்
ஶுஷ்யத்ஸுதாஸ்ரோதா:	உலர்ந்துபோன அம்ருத ப்ரவாஹத்தையுடையனாய்
கதமதுந: க்ஷௌத்ரகோஶஸ்ய	தேனற்ற தேனடையினுடைய
ஸாம்யமேதி	ஒப்பை அடைகின்றானே,
சக்ராத்மந:	திருவாழியாழ்வானுடைய
தே	அப்படிப்பட்டவையாய்
ரசிதஸாவர்ண்யவ்ருஷ்டய:	வர்ணஸம்ருத்தியைப் பண்ணவல்லவைகளான
ருஷ்டய:	கிரணங்களானவை
வ: ரக்ஷந்து	உங்களைக்காத்தருள்க.

வளரொளிய கனலாழியின் ஜ்வாலாஜாலமானது ஆகாசத்தை அளாவி எங்கும் பரந்தவளவில் அதனுடையதாபம்பட்டு மிகவும் வாட்டமடைந்த ஸூர்யன் தாபசாந்திக்காக நீர்கொண்ட மேகமண்டலங்களில் அடிக்கடி அவகாஹித்து அதனால் தாபம் தணியப்பெற்றுத் தனது தொழிலைச் செய்ய வல்லவனாகிறான். ஸூர்யனுடைய கதி இதுவாயிற்று: சந்திரனோ வென்னில், [ப்லுஷ்டத்ராஸத்ருஷிதவபு: என்ற விசேஷணம் சந்திரனுக்கும் அந்வயிக்கக்கடவது.] தனது அம்ருதரஸமெல்லாம் ஶோஷமாகப் பெற்றவனாய்த் தேன் அற்ற தேனடைபோலும் நிலைமையை எய்துகின்றான். ப்ரஸித்ததேஜஸ்ஸர்களான சந்த்ரஸூர்யர்களை இப்பாடுபடுத்தவல்ல பெருமைவாய்ந்த ஸுதர்சந கிரணங்கள் உங்களைக் காத்தருளவேணு மென்றாயிற்று. [உத்ஸ:–ப்ரவாஹம். வ்ருஷ்டி:–ஸம்ருத்தி,] (கக)

பத்³மௌகோ⁴ வாபிகாஸு ஸ்வநியாதடே நைர்ஜராம்ப⁴:ப்ரவாஹ:, ஸிந்தூ³ரம் குஞ்ஜராணாம் தி³ஶிதி³ஶி க³க³நே ஸாந்த்⁴யமேக⁴வ்ருந்த³: । பாராவாரே ப்ரவால: வநபு⁴வி ச ததா² ப்ரேக்ஷ்யமாண: ஸூரிபி⁴:, ஸாது⁴ ஶ்ரேயோமயம் வ: *ஶ்ரேயோமயம் ஜநயது சக்ரராஜதே³ஹதீ³தி⁴திராஶி: ॥ (௧௨)

வாபிகாஸு	வாவிகளின் தண்ணீரில்
பத்³மௌக⁴:	செந்தாமரை மலர்களின் திரளாகவும்
ஸ்வநியாதடே	மலைச்சாரலில்
நைர்ஜராம்ப⁴:ப்ரவாஹ:	யாத்ராஜலங்களின் அருவி வீழ்ச்சியாகவும்
தி³ஶிதி³ஶி	திசைகள்தோறும்
குஞ்ஜராணாம்	திக்கஜங்களினுடைய
ஸிந்தூ³ரம்	சிந்தூரப்பொடியாகவும்
க³க³நே	ஆகாயத்தில்
ஸாந்த்⁴யமேக⁴வ்ருந்த³:	அந்திப்போதை மேகத்திரளாகவும்
பாராவாரே	கடலில்
ப்ரவால:	பவழமாகவும்
வநபு⁴வி ச	காட்டிடத்தில்
ததா² (ப்ரவால:)	பல்லவமாகவும்
ஸூரிபி⁴: ப்ரேக்ஷ்யமாண:	ஸூரிகளாலே பார்க்கப்படாநின்ற
சக்ரராஜதே³ஹதீ³தி⁴திராஶி:	திருவாழியாழ்வானது கிரணஸமூஹமானது
வ:	உங்களுக்கு

ஸாது⁴ ஶ்ரேயோமயம் ஜநயது நல்ல அறிவைஉண்டாக்குக.

திருவாழியாழ்வானுடைய ஜ்யோதிஸ்ஸமூஹம் ஸர்வவ்யாபியென்னுமிடத்தை ஒரு அலங்காரமாகப் பேசுகிறார் இதில். வாவித்தடம், மலைச்சாரல், ஆகாயம், கடல், காடு முதலான எல்லாவிடங்களிலும் திருவாழியாழ்வானுடைய சுடர்ச்சோதிவெள்ளமே வியாபித்துக்கிடக்கின்றது; ஆனால் உண்மைகண்டறியகில்லாத மூட ஜனங்கள் "இவையெல்லாம்ஸாதாரணஜ்யோதிர்வஸ்துக்களேயாம்"

என்று அறுதியிடமாட்டாமல் ஓரோவிடங்களில் ஓரோவஸ்துவாக மயங்குகின்றன: அந்த ஏகபதார்த்தத்தை வாவித்தடங்களில் தாமரைமலர்களாகவும், மலைச்சாரல்களில் காவிநீர்ப் பெருக்காகவும், த்விஜங்களிடத்தில் சிந்துரச் செம்பொடியாகவும், ஆகாயத்தில் ஸந்த்யாஸ்வாபாவிகராகமாகவும், கடலினுள் பவழமாகவும், காட்டிடத்தில் செந்தளிராகவும் ஸ்வப்ஜநங்கள் காணுகின்றனவித்தனை. (உண்மையறியவல்ல யதார்த்தத்ர்சிகள் இங்ஙனே ப்ரமிக்கமாட்டார்கள்; பத்மம், கௌஸிகாஸ்வபாகம், ஸிந்தூரம், ப்ரவாளம். முதலானவற்றை ஸாத்ருஸ்யப்ரஸாத்யமாகவே காண்பர்கள்—என்பது உள்ளுறை) இஃது அதிஸயோக்தி.

த்ருதியபாதத்தில் 'ததா' என்பதனால் 'ப்ரவாள:' என்றதை அநுஷங்கித்துப் பொருள்மாத்திரம் வேறாகக் கொள்ளத் தக்கது. "ப்ரவாளோ வல்லகீதண்டே வித்ருமே பல்லவேபி" என்ற நிகண்டுவின்படி ப்ரவாளஸப்தத்துக்குப் பல்லவமென்றும் பவழமென்றும் பொருளுண்டாதல் உணரத்தக்கது.

"ஸாதிஷ்டா: ப்ரபோதா" என்றும்.....ப்ரபோதா என்றும் பாடபேதமுண்டு. ப்ரபோத:—ஸந்தோஷம். ப்ரபோத:—சிறந்த ஞானம். [அநகஜஷே¬ஷிண:] அநகஜஷே என்று எம்பெருமானுக்குத் திருநாமமிருப்பதுபோலவே திருவாய்மொழியாழ்வானுக்குமுண்டு. கவிஷாம் ஸங்கீர்த்தேஷு; ஸ ஆஸந் ராஸி ஸ்ரேணி விஸ்ரஹ:. அதவா—கவிஷாம் ஸமூஹ: ஸ்ரேஷ்டு; தஸ்யராஸி: என்பாருமுண்டு: ஸமூஹத்தினுடைய ஸமூஹம் என்பதனால் பாஹுள்யாதிஸயமே தோற்றும். ... ... (௧௨)

ஸ்ரீநாதா! ஸாநாதஸ்திதா ஸம்ரக்ஷி காவேரிநீதிகா! தேவத்ரு தேஜ:, தாரா:! ஸ்ராத்ராநந்தவேராந்ஸ்யுத்! நமஸ்த: ஜெஸ்ரமேதராஸ்ரைதார்! ஸம்ஸத்தம் நஸ்ஸ்ர யதாதர்ஸயே வக்ராராஜாம்ஸ்வதேஷு, யாஷ்டாகம் ப்ரஸாதாவப்ரஸவலஸமநா வக்ரேய க்ருஷ்ணாஸு (௧௩)

யஸ்யோதயஸமயே	எந்த ஸூர்யகிரணங்களின் உதயகாலத்தில்
நபஸ்யா:	ஆகாசத்திலுள்ள தேவமநுஷ்யாதிகள்
'ஹே பாநோ! க்ஷீணா பா: தே நாவபாஸதி'	'ஓ ஸூர்யனே! உனது தேஜஸ்ஸானது (ஸூர்யகிரண தேஜஸ்ஸின் முன்னே) விளங்கவில்லை (என்று ஸூர்யனை நோக்கியும்)
'ஹே ஶீததீதிதே! தே தேஜ: க்வ நு?'	'சந்திரனே! உனது தேஜஸ்ஸு எங்கே?' (என்று சந்திரனைநோக்கியும்)
'ஹே தாரா: தூராஸ்த'	'நக்ஷத்திரங்களே! தூரத்தில் நில்லுங்கள்' (என்று நக்ஷத்திரங்களை நோக்கியும்)
'அக்நே! க்ஷீணோஸி'	'அக்நிபகவானே! சப்பையாய்விட்டாயே!' (என்று அக்நியை நோக்கியும்)
'ஹே வஜ்ராக்நிஜ்யோதி:!	'ஓ வஜ்ராமியினது தேஜஸ்ஸே!
ஸ்வத:	உனக்கு
ஸ்வாதந்த்ர்யம் ந'	தனித்து விளங்கக்கூடிய ஸ்வாதந்திரியமில்லை (என்று வஜ்ராமி தேஜஸ்ஸை நோக்கியும்)
இத்தம் ஶம்ஸந்தி	இவ்வாறாகச் சொல்லுகின்றனரோ,
தே	அப்படிப்பட்ட பெருமைவாய்ந்த
சக்ரராஜாம்ஶவ:	திருவாழியாழ்வானுடைய கிரணங்கள்
யுஷ்மாகம்	உங்களுடைய
ப்ரௌடதாப ப்ரபவ பவ ரோக க்ஷயாய	ப்ரௌடமான தாபத்ரயாதிகட்கு உத்பத்திஸ்தானமாகியஸம்ஸாரமாகிற நோய் தீர்வதன்பொருட்டு
க்ரமந்தாம்	பராக்ரமிக்கட்டும்.

கீழ் ஏழாவது ஶ்லோகத்தில் ப்ரதிவாதித்த விஷயத்தையே ப்ரகாராந்தரத்தாலே இதிலும் அருளிச்செய்கிறார்.

திருவாழியாழ்வானுடைய கிரணங்கள் கிளரும்போது, ஆகாசத்தில் திவ்யவிமாநசாரிகளான தேவகந்தர்வாதிகள், ஸூர்யன் சந்திரன் முதலிய தேஜ:பதார்த்தங்களை நோக்கி இங்ஙனே சொல்லுகிறார்களாம்:—அப்பா ஸூர்யனே! உனது ஒளி விளங்கமாட்டாமல் மங்கிப்போயிற்றுக்காண்; அப்பா சந்திரனே! உன் தேஜஸ்ஸு எங்கே புக்கொளித்தது? நக்ஷத்திர கணங்களே! இனி நீங்கள் கடக்க நிற்கவேண்டுமத்தனை; ஓ ஸஹஸ்ரபானுவானே! உன்னை நாங்கள் பெருமதிப்பனாக நினைத்திருந்தோமே; ஒளியற்றவனாய் சப்பையாய்விட்டாயே!; ஓ வஜ்ராக்நிதேஜஸ்ஸே! நீ ஸுதர்ஸநஜ்யோதிஸ்ஸில் லயித்து உருவழிந்துபோகும் ஸாமாந்யனாய் விட்டாயேயன்றி ஸ்வதந்த்ரதேஜோவஸ்து அல்லைகாண்; என்று நின்றார்கள் ஸமஸ்த: இப்படி சொல்லுகிறார்களோ வென்னில்; சொல்லாவிடினும் இங்ஙனே சொல்லவேண்டும்படியான நிலைமை விளைகின்றதென்கையிலே தாத்பர்யம். அப்படிப்பட்ட ஸுதர்ஸந கிரணங்கள் உங்களுடைய ஸகல து:க்ககாரணமான ஸம்ஸாரரோகத்தைத் தொலைக்கக்கடவன வென்றதாயிற்று. இரண்டாம் பாதத்தில் "தாரா: ஸ்பாரா:" என்றும் பாடம் வழங்கும். அப்போது, (சுலி, ஸ்ப:,) ஸ்பு. என்று ப்ரணயஸ்வைஷாநரபாவமாம். அதிற்காட்டிலும் ப்ரணயஸ்வைஷாநரபாவமே பொருட்சேர்த்திக்கும் அக்ஷராநுப்ராஸரீதிக்கும் ஒக்கும். பெரியோர் ஓதும் பாடமும் இதுவே. வ்ருத்தி—ஸ்ராக், ஸ்ரீ, ஸ. என்று ரூபம்.

ஜ்வாலா கல்பேஷு தீப்யத்ஸுரவிஸாஸ்த்ரபாக்ஷிஷு ஸ்வஸ்யந்தீ, வீஸ்வாஸாஸ்ருஸ்ராந்த்ய: ஸஸ்யாபந்தமதாஸஹ்ய ஸ்வாஸ்ரீதாநாம் ஸதா ஸுக்லஸ்தாங்ஸோராஸ்ரிதாபம் ப்ருஸ்ரிதாநாம் ஐஸ்வாநா:, ஜீர்ணம் ஸ்ராகோஸாஸ்வ்ருத்தி ஸாஸ்வதஸே: ஸாந்தாநாம் ஸ்வஸ்தாஸ் ॥ (௧௪)

அரிவத்ருஶாம் — ஸுந்தரீகளுடைய [அஸுர ராக்ஷஸமாதர்களுடைய]

கர்ணேஷு	காதுகளில் (மங்களாலங்காரமாக அணியப்பட்டிருந்த)
தூர்வாப்ரவாளாந்	அறுகம்புற்கதிரை
ஜக்த்வா	தின்றுவிட்டும்
ஸுராங்கநாநாம்	தேவமாதர்களுடைய
சக்ஷுஷ்ஷு	கண்களில் (பெருகிக்கொண்டிருந்த [த
அஶ்ரூ:	நீரை
பீத்வா	குடித்துவிட்டும்
ஸ்வைரம் யதா ததா சாரிண்ய:	தருமநெறி வழுவாமல் திரிகின்றவையாயும், (பசுக்களின் பக்ஷத்தில்) 2. காளைகளோடுகூடத்திரிகின்றவையாயும்
ஶ்ரீஶேந வல்லவேந	ஸ்ரீகோபாலனான எம்பெருமா [னாலே
அநுகதா:	பின்செல்லப்பெற்றவையாயும்
ஆஶ்ரிதாநாம்	அடுத்தவர்களுக்கு
வரம் க்ஷீரரஸம்	சிறந்த க்ஷீரரஸத்தை (2) சிறந்த மோக்ஷருசியை
துஹாநா:	கறந்து கொடுப்பவையாயும் (2) உண்டுபண்ணுகின்றவையாயும் இருக்கிற
ஸ்வாலோகத்வஸ்தத்ரிபுவநதமஸ: சக்ரஹஸ்தஸ்ய காவ:	ஸ்வாலோகத்தாலே மூவுலகவிருளையும் விலக்கின திருவாழியாழ்வானுடைய கிரணங்களானவை, (2) தனது கடாக்ஷ வீக்ஷணத்தாலே மூவுலகத்தவரின் அஜ்ஞாநாந்தகாரங்களைப் போக்கியருளும் கண்ணபிரானுடைய பசுக்களானவை
வ:	உங்களுக்கு
ஸாந்தத்யாநாம் ஶ்ரியம்	தொடர்ச்சி அறுமல் ஶாஶ்வதமாயிருக்கக்கூடிய செல்வத்தை
தததாம்	தந்திடுக.

திருவாழிபாழ்வானுடைய கிரணங்கள் உட்கட்குத் தொடர்ச்சியறாத செல்வத்தைத் தந்திடுக வென்கிறார். "[illegible]" என்ற [illegible]ப்படி [illegible]க்கு உள்ள பலபொருள்களில் பசு என்ற பொருளையும் கிரணம் என்னும் பொருளையும் ஏககாலத்தில் இங்கே விவக்ஷித்து '[illegible]' என்றருளிச் செய்கிறார். '[illegible]' என்னும் [illegible] என்ற [illegible]யால் கண்ணபிரானையும், '[illegible]' என்னும் [illegible]யால் திருவாழியாழ்வானையும் சொல்லும். ([illegible],) ஆகவே, "[illegible]" என்ற [illegible]யில், திருவாழியாழ்வானுடைய கிரணங்கள் என்ற பொருளும் கண்ணபிரானுடைய பசுக்கள் என்ற பொருளும் ஆரும்படியருளிச்செய்கிறார் [illegible]த்தாலே. இரண்டிற்கும் பொருந்த விசேஷணங்களிடுகிற வைசிவியைப்பாரீர். [[illegible]] பசுக்கள் புற்களைத்தின்று தண்ணீரைக் குடித்துத் திரியும்; [illegible]கிரணங்களும் அப்படியே செய்கின்றன;—அஸுர ராக்ஷஸமாதர்கள் தங்கள் காதுகளில் [illegible]மாக அணிந்துகொண்டிருந்த அறுகம்புல்லைத் தின்றுவிட்டுத் தேவமாதர்களுடைய கண்களிற் பெருகிக்கொண்டிருந்த [illegible]த்தைப் பருகிவிட்டு ஸவிலாஸமாகத் திரிகின்றனவாம். இதனால் பெறப்பட்டதென்னென்னில்; [illegible] வியவைகளாம்படி அவர்களது [illegible]க்களையொழித்து, அவர்களால் நலிவுபட்டிருந்த தேவஜாதியின் [illegible]த்தைத் தீர்த்தவை [illegible]கிரணங்கள் என்றதாகிறது. கழுத்தில் [illegible]ணம் போலே காதில் [illegible]மும் ஸுமங்கலிகளுக்கே உரித்தின; அது போயிற்றென்றால் வைதவ்யம் வந்தவாறுமத்தனை. [illegible]க்கள் செத்தபின்பு தேவ

மாதர் அழுவதற்கு ப்ரஸக்தியில்லாமையால் அவர்களுடைய கண்ணீர் ஸுதர்சநகிரணங்களால் பருகப்பட்டதாக உத்ப்ரேக்ஷிக்கப் பட்டது.

''ஸவ்ருஷம்'' என்பது 'ப்ராஜ்ஞ:' என்ற ப்ராணக்ரியையிலே விசேஷணமாக அந்வயிக்கக் கடவது. [ஸவ்ருஷம் ப்ராஜ்ஞ:] வ்ருஷசப்தத்திற்கு வ்ருஷபமென்றும் ரச்மியென்றும் இரண்டுபொருள். பசுக்கள் வ்ருஷபத்தோடே கூடித்திரியும், ஸுதர்சந கிரணங்களானவை ரச்மித்தோடே ஸஞ்சரியாநின்றன. அதாவது—பாவிகளை நிரஸித்தலும் 'ஸாத்விகர்களைப் பாதுகாத்தலுமாம். அபாயமறியாத எம்பெருமான்படியே இருக்குமாய்த்து தாத்பர்யமும். [க்ருஷ்ணேநேவ அநுயாதா:] க்ருஷ்ணேனைவானு எம்பெருமான் பின்செல்லப்பெற்றிருக்கை பசுக்களுக்கும் ஸுதர்சநகிரணங்களுக்கும் ஒக்கும். இவைபுகுமிடமெங்கும் எம்பெருமானும் புக்கு நிற்கிறானிறே ஸர்வதேசவ்யாபித்வம் ஸவிசேஷகம்||

[ஸ்ரிதானாம் அம்ருதாஸம் தோஹனா:] ''அம்ருதம் யஜ்ஞசேஷஸ்யாத்பீயூஷே ஸலிலே க்ருதே। அயாசிதே ச மோக்ஷே ச'' என்ற நிகண்டுகோசத்தின்படி அம்ருதசப்தத்துக்குள்ள பல பொருள்களில், பால், மோக்ஷம் என்ற இரண்டு பொருள்கள் இங்கே விவக்ஷிதம். பசுக்கள் தம்மை எய்தினர்க்குப் பாலைத் தரும். இவை முக்தியைத்தரும். ''ஸ்வாலோகத்வஸ்த த்வாந்தஸந்ததய:'' என்பதை பஹுவ்ரீஹிஸமாஸமாகக் கொண்டு (காவ:) என்பதற்கு விசேஷணமாக அந்வயிப்பர் சிலர். ஷஷ்டீஸமாஸமாகக்கொண்டு சக்ரஹஸ்தாவுக்கு விசேஷணமாக அந்வயிப்பது சிறக்கும். [ஸ்வாலோகத்வஸ்த த்வாந்தஸந்ததய: சக்ரஹஸ்தா:] ஆலோகமென்று ப்ரகாசத்துக்கும் பார்வைக்கும் பெயர். எம்பெருமான் தனது கடாக்ஷ வீக்ஷணத்தாலே த்வாந்தஸந்ததியையும் போக்கியருள்பவன்; திருவாழியாழ்வான் ஸ்வப்ரகாசத்தாலே அங்ஙன் செய்பவன். முதல்பக்ஷத்தில் தர்சநீயமும் ஸுஜ்ஞாநம்.

[ஸாந்த்³ராநந்த³ம் ஸ்ரீபதிம் தத³த³தா³] வென்பதினுடைய தொடர்ச்சி போலே கூடியிருக்கையாவது விச்சேதமற்றிருக்கை; ஸாந்த்³ரமான என்றபடி. செல்வத்தை மேன்மேலும் பெருகச் செய்கவென்கை. [த³த³தா³] இந்த ஷப்³த³ரூபம் "யாசிதாரஶ்ச ந: ஸந்து" என்ற யாசஸில் நிஷ்டமென்று ஶங்கிக்கும் சிலர், 'த³த்தம், த³தா³தம், த³த³தாம்' என்றுகொண்டு "த³த³தாம்" என்றன்றோ ப்ரயோகிக்க வேணும்; த³த³தாமென்னவொண்ணாதேயென்று சோத்³யம் பண்ணுவர்கள். அங்ஙனன்று; ஸ்ம்ருதியில் "த³த³ — தா³நே" என்றொரு யாதுவுண்டு; அதில் லோட்³ப்ரத²மைகவசநமாக ஸமாவர்த்தமாக ரூபமாய்த்து இது. த³த³தாம், த³தே³தாம், த³த³தா³ — ஜதி! "ஸாதி³ஷ்டம் மே மே ஸ்ருதிராஜ்ய 'த³த³ஸ்வ' நோதி³ம் வதா³ஸி ஸுர!" என்றார் ஆழ்வானும் ஸுந்த³ரபா³ஹுஸ்தவத்திலே.

இப்லோகத்தில் கண்ணபிரானுடைய பசுக்களின் வரமாக ஒரு பொருள் தோன்ற ஸம்பு³த்³தி⁴ந்யாஸம் பண்ணின விதற்குக் கவியின் மதி வமத்ராராதிஸய த்³யோதகநோக்ஷிதி வாரதாதிஸய மேயாய்த்துப் வாரமேப்ரயோஜநம். இங்கே ஶ்ருதியா? உவமா லங்காரமா? ஶ்லேஷமா? எங்ஙனே நிர்வஹிப்பதென்னில்; சிலர் சொல்லக்கூடும்—உபமாவாசகமான இவாதிகள் இல்லாமையாலே உபமாலங்காரம் சொல்ல இடமில்லை; மாஸகாவ்யத்தில் ஸூர்யகா வர்ணநத்தில் "ராத்ரௌ ஜதி ஸ்ரா வமஸ்ய வஸ்தாகாஸ் ராஜம் விவிசுர் ஜதி வயமாயணீ: யஸ்ராமேஶவல நபோ⁴மீகா: ஸமேவயபிஷி வமுமலீயமாவா:நா:" என்ற ஶ்லோகத்தில் போலே ஸம்ஸஶ்லேஷம் சொல்லுதற்கும் இடமில்லை. "வநதவீத்நயி கவயப:ஸ்ரீயம் வஹ ந்த்ய: ஸம்யோக்ஷாஸம் வவநஸாவாஜவெந நீதா:। வாஞ்சேகாரர ஷித ராமேக்ஷணாநாம் ஸாயமேத்ர்யா உயக்தியாம் மேஹாஸர ஸர்ய:॥" என்ற ஶேஷவதகவர்ணந ஶ்லோகத்திற்போல ஶுக்லஸ்வ ஶ்லேஷம் சொல்வதற்குமில்லை; ஸமம், ஸாயமேந்த்ரியாதிஸவ ஷங்கள் இல்லாமையாலே. ஆனபின்பு ஶ்ருதியேயாகக்கடவதென்பர்; அங்ஙனல்ல; "க்ஷபஶத்திஜாதொ:ஸுகாமஷாவீ மரவஸாவிஶஷீவ

யோயந்தோரவர்யோத்யா: | ஸததமேவோததா மஹ்யாமிவோ: வர்ணிதக்ஷிகாஸ்ய ப்ரவிகலதிவ"என்ற ரோபதகவசநமேசா கத்திற்போல ஸ்ரேஷ்டமாநஸமான ஸமோவேகமாகக்கடவது. ஸவவ யாவி சஷ்டாதமான ஒரு ஈயத்தைத் தோற்றுவித்தல் வாராத்ரிமய ஹேதுவாம் என்ற க்ஷேத்ரிகவிஷாஷ ஸாத்ஹம் இங்கே அநுஸந்தேயம். ... ... (௧௪)

ஸேநாம் ஸேநாம் மகோநோ மஹதி ரணமுகே ஸம்ப்ரமம் பயம் ப்ருசம் நயந்தீ:, உத்ஸேகோத்கோஷாமர்ஷதோஷ்மாம் ஸமிதிவிஷஹ்யாஸுரவர்கா நவந்தே | விச்வம் விச்வம்பராத்யம் ரதசரணபதேர்லீலயா பாலயந்தீ, ஸம்ருத்திஸ்ஸா தீதிதீநாம் வ்ரஜநமுஜநமேதாஜநய ஸ்தாஸ்துகம் வ: || (௧௫)

மஹதி ரணமுகே	பெரிய போர்க்களத்தில்,
ஸேநாந்ய	தலைவர்களோடு கூடினதான
மகோந: ஸேநாந்ய	இந்திரனது சேனையை
ப்ருசம் பயம் நயந்தீ:	மிகவும் பயப்படுத்தாநிற்கிற,
